# தொழிலாளி

இலங்கை தொழிற் சங்க சம்மேளன வெளியீடு

விலை சதம் 10 | இந்தியாவில் 10 நயா பைசா | பக்கங்கள் 8

முரசு 1 | 15 - 8 - 63 | ஒலி 5


வீர ஹர்த்தால்
தியாகிகளின்
நாமம் வாழ்க!

# புதிய வெற்றிகளை நோக்கி முன்னேறுவோம்!

## ஹர்த்தால் நினைவு வழிகாட்ட வேண்டும்

**1953** ஆகஸ்ட் 12-ம் திகதி நடைபெற்ற மகோன்னத ஹர்த்தாலின் 10வது ஆண்டுவிழாவை ஆகஸ்ட் 12ல் நாம்கொண்டாடுகிறோம். இந்த நாட்டு தொழிலாளிவர்க்கத்தின் அதி உயர்ந்த புரட்சிகரத் தன்மையை எடுத்துக்காட்டிய நாள் அதுவாகும். அந்த மறக்க முடியாத நாளிலிருந்து பத்து வருடங்கள் கழிந்துவிட்டன. இந்த இடைக்காலத்தில் எமது நாட்டு புரட்சிகர இயக்கங்கள் மலையென வளர்ந்துள்ளன. இன்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிலையை எட்டிப் பிடித்துள்ளன. அன்று ஹர்த்தாலை உருவாக்கியு நிலையே மீண்டும் தோன்றியுள்ளது.

**1953**-ம் ஆண்டு நிலவிய அதே புரட்சிகர நிலை இன்று மீண்டும் சக்திபெற்று வலுப்பெற்றுள்ளது. ஆனால் வேற்றுமைகள் உள்ளன. 1953-ல் இருந்ததைவிட உயர்ந்து, உறுதியான நிலைக்கு புரட்சிகர இயக்கங்களின் ஐக்கியமும், போராட்டமும் வளர்ந்துள்ளன. அன்றிருந்ததைவிட இப்பொழுது தொழிற் சங்கங்களும், முற்போக்கு சக்திகளும் ஐக்கியப்பட்டு, சிறப்பாக அணிதிரட்டப்பட்டு, கூடிய அனுபவம் பெற்றவையாக விளங்குகின்றன. 1953-ல் தற்காலிகமாக இடதுசாரிகள் மத்தியில் ஒற்றுமை ஏற்பட்டது. இப்போது 23 வருடங்களாக இருந்த பிளவு அகற்றப்பட்டு கூடுதல் சக்திபெற்ற இடதுசாரிகள் ஐக்கிய முன்னணி அமைக்கப்பட்டுள்ளது. இது எல்லாவற்றிலும் முக்கியமானதாகும்.

## தொழிலாளிக்கு உதவாத பட்ஜட்!

முன்னெப்பொழுது இருந்ததிலும் பார்க்க இன்று தொழிற் சங்க இயக்கம் ஒற்றுமைப்பட்டுள்ளது. போராட்டத்திற்கான ஒற்றுமை ஒன்று ஆறு தொழிற்சங்க மத்தியஸ்தானங்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. இதுவும் முன்னெப்பொழுதும் பெற்றிராத ஒன்றாகும். இது எதிர்காலத்தில் ஒரு கைத்தொழிலுக்கோ, பகுதிக்கோ ஒரு தொழிற் சங்கம் என்பதற்கும், இந்த நாட்டு தொழிற்சங்கங்கள் சகல வற்றிற்கும் ஒரு சம்மேளனம் என்ற நிலையை ஏற்படுத்தவும் கருப்பொருளாக அமையும்.

அரசாங்கத்தின் சம்பளம் உயரக்கூடாது என்ற கொள்கையும், வேகமாக வளர்ந்து வரும் வாழ்க்கைச் செலவும் மக்களை, குறிப்பாக தொழிலாளர்களை பெரும் இக்கட்டான நிலைக்குத் தள்ளியுள்ளது. இந்த நேரத்தில் திரு. இலங்கரத்தினாவால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் தொழிலாளி வர்க்கத்திற்கு எவ்விதத்திலும் உதவி செய்யவில்லை; அவர்களின் கஷ்டங்களைத் தீர்க்கவில்லை.

நகரப் புறங்களில் வாழக்கூடிய 28000 மக்களுக்கு மாத்திரம் வரிக்குறைப்பின் மூலம் இந்த வரவு செலவுத் திட்டம் உதவிசெய்துள்ளது. இது தவிர மண்ணெண்ணைக்கும், மாவுக்கும், பாணுக்கும் விலை குறைக்கப்பட்டுள்ளது. இது ஓர் சிறிய உதவியாகும். ஆனால் இது எவ்விதத்திலும் உயர்ந்துள்ள வாழ்க்கைச் செலவை ஓர் சிறிதளவாவது குறைக்கவில்லை. அரசாங்க விலைக் கட்டுப்பாடு நிர்வாகம் இல்லாததினாலும், மொத்த விற்பனையிலேயே ''பிளாக்மார்கட்'' நடைபெறுவதினாலும் இந்த சிறிய விலை குறைப்புத்தானும் சாதாரண மனிதனுக்குக் கிடைக்குமா என்பது சந்தேகமானது.

இதை நாங்கள் விளக்க விரும்புகிறோம். மண்ணெண்ணை ஒரு கலனுக்கு ஆறு சதம் குறைக்கப்பட்டுள்ளது. அவ்விதமாயின் ஒரு போத்தலுக்கு ஒரு சதம் குறைந்துள்ளது. ஆனால் ஒரு தொழிலாளியின் குடும்பத்தில் அதிகமாக ஒரு போத்தல் வாங்கும் வழக்கம் கிடையாது. தொழிலாள வர்க்க குடும்பங்களை நன்கு தெரிந்தவர்களுக்கு இது தெரியும். ஏனெனில் அவ்விதம் அவர்களால் வாங்க முடிவதில்லை. அதிகமாக அரைப் போத்தல் அல்லது கால் போத்தல் மட்டுமே வாங்குவார்கள். அந்த நிலையில் நிச்சயமாக எந்த வியாபாரியும் ஒரு சத விலைக் குறைப்பை சாதாரண மக்களுக்கு அரை போத்தலுக்கோ, கால் போத்தலுக்கோ குறைக்கப்போவதில்லை. பாணுக்கும் அரை ருத்தல் பழைய விலையான 15 சதத்திற்கே விற்கப்படுகிறது. உண்மையில் இவ்வித விலை குறைப்பால் வியாபாரிமார்களே லாபம்பெறுகின்றனர். மாற்றுமுறை வரியும் முடிவில் வாங்குவோர்களாகிய பொதுமக்களையே சாரும்.

### திட்டம் இல்லை

உண்மையில் வாழ்க்கைச் செலவைக் குறைக்க அதாவது உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விலையைக் குறைக்க முதலில் பொருட்களின் உற்பத்தி அதிகரிக்கப்படவேண்டும். ஆனால் அவ்விதம் உற்பத்தி அதிகரிப்பைப் பற்றி எதுவும் இந்த வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. பதிலாக அன்னிய மூலதனங்களில் கைவைப்பதில்லை என்ற சுதந்திரக் கட்சியின் கொள்கைத் திட்டத்திற்குள்ளேயே இவ்வரவுசெலவும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வரவு செலவுத் திட்டத்தில் மேலும் பல சுமைகள் தம்மேல் திணிக்கப்படுமென மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் அவ்விதம் நடைபெறவில்லை. இதுவே இவ்வரவு செலவுத் திட்டம் முதலில் வரவேற்கப்பட்டமைக்கு காரணமாகும்.

## ஆட்சியின் போக்கை மாற்ற ஒற்றுமை அவசியம்

அரசாங்கம் தனது "சம்பளம் உயரக் கூடாது" என்ற கொள்கையைக் கைவிடுமா என்ற தொழிலாளி வர்க்கத்தின்கேள்விக்கு இந்த வரவு செலவுத் திட்டத்தில் எவ்வித பதிலும் காணப்படவில்லை. இலங்கரத்தினா சமர்ப்பித்த பொருளாதார விளக்கப்படி, சம்பளம் உயரக்கூடாது என்ற கொள்கையும், மத்திய வங்கியின் சகல ஆலோசனைகளும், நெருக்கடி என்ற பயமுறுத்தலும் நீக்கப்படவேண்டும். ஒரு போத்தல் மண்ணெண்ணைக்கு ஒரு சதக் குறைப்பும், பாணுக்கு குறைத்துள்ள குறிப்பிட முடியாத விலையும் தொழிலாளி வர்க்கத்தை ஏமாற்றிவிடாது. கூடியுள்ள வாழ்க்கைச் செலவுக்கு ஈடுசெய்ய சம்பளம் உயர்த்தப்படவேண்டும் என்ற தொழிலாளி வர்க்கத்தின் கோரிக்கை எவ்விதத்திலும் அகன்றுவிடவில்லை.

பலமுறை ஒன்றுகூடிப்பேசிய ஆறு தொழிற்சங்க மத்திய ஸ்தாபனங்கள் அண்மையில் பொதுவான 17 கோரிக்கைகள் பற்றி உடன்பாட்டுக்குவந்தன. கூடியுள்ள வாழ்க்கைச் செலவுக்கு ஈடுசெய்யும் முறையில் ஒரு நாளைக்கு 1/- ரூபா அல்லது மாதத்திற்கு 30/- வீதம் சகல தொழிலாளர்களுக்கும் உயர்த்த வேண்டும். இது சகல தொழிலாளர்களின் பொது நன்மைக்கான கோரிக்கையாகும். இக்கோரிக்கைக்கு எந்த விதத்திலும் இலங்கரத்தினாவின் வரவு செலவுத்திட்டம் வழிவகுக்கவில்லை.

ஆறு மத்தியஸ்தானங்களும் தயாரித்துள்ள கோரிக்கைகளின் அடிப்படையில் சகல தொழிற்சங்கங்களும் பிரச்சாரத்தில் ஈடுபடவேண்டும். ஐக்கியமான போராட்டத்திற்கு தயாராக வேண்டும். தொழிற் சங்க இயக்கத்தின் இக்கோரிக்கைகளுக்கான போராட்டத்தில் சகல தொழிற்சங்க இயக்கமும் ஒன்றுபட்டால் நிச்சயமாக அரசாங்கத்தைப் பணிய வைக்கமுடியும்.

முதலாளி வர்க்கத்திற்கும், அரசாங்கத்திற்கும் எதிராக சக்திவாய்ந்த வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றை நடத்த தொழிலாளி வர்க்கம் தயாராகிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் இடதுசாரி ஐக்கிய முன்னணி அமைக்கப்படுகிறது. ஆகவே இன்று வளர்ந்துவரும் தொழிலாளர் போராட்டங்களுக்கு ஐக்கியமான, புரட்சிகரமான தலைமையளிக்கும் கடமை முதலில் இடதுசாரி ஐக்கிய முன்னணி முன்னுள்ளது.

மகோன்னதமான ஹர்த்தால் தினத்தைக் கொண்டாடும் எங்களுக்கு அந்த நல்ல நாளின் நினைவு புதிய உணர்வுகளை ஊட்டட்டும். அந்த வழியிலே சென்று, இந்தநாட்டு விவகாரங்களில் தொழிலாளி வர்க்கம் முக்கிய பாத்திரம் வகிக்கக்கூடிய ஓர் நிலையை ஏற்படுத்த முடியும்.

# பூரண ஆயுத ஒழிப்பு அவசியம்

## சமாதான உலகுகாண மக்கள் சீனத்தின் ஆலோசனை!

**அணு ஆயுதங்களின் முற்றுன, சம்பூரண, மொத்தமான, உறுதியான தடையையும், ஒழிப்பையும் கோரியும், உலகின் எல்லா நாடுகளினதும் அரசாங்கத் தலைவர்கள் மகாநாடு ஒன்றைப் பிரேரித்தும் சீன அரசாங்கம் ஜூலை 31ம் திகதி வெளியிட்ட ஓர் அறிகையின் சுருக்கத்தை தமிழில் தருகிறேம். தலையங்கங்களும், உப தலையங்கங்களும் எம்முடையது-ஆர்.)**

அணு ஆயுத பரிசோதனைகளின் அரை குறை நிறுத்தத்திற்கான உடன் படிக்கை ஒன்று அமெரிக்க, பிரிட்டிஷ், சோவியத் யூனியன் பிரதிநிதிகளால் சூலை 25ம் திகதி மாஸ்கோவில் கைச்சாத்திடப்பட்டது. இது மூன்று அணு வல்லரசுகளாற் கைச்சாத்திடப்பட்ட ஒரு உடன் படிக்கை. இந்த உடன் படிக் கையினுல் அவை தங்களின் அணு ஆயுத ஏகபோகத்தை நிலைபெற செய்கின்றன என அவ்வறிக்கை கூறுகிறது.

மேலும் ''உலக மக்கள் பொதுவான ஆயுதப் பரிகரணத்தையும் அணு ஆயுதங்களின் சம்பூரணத் தடையையும் கோருகின்றனர். இந்த உடன் படிக்கை அணு ஆயுதப் பரிசோதனை நிறுத்தத்தை, அணு ஆயுதங்களின் மொத்தமான தடையிலிருந்து முற்றுகத் தனிப்படுத்துகிறது, மூன்று அணு வல்லரசுகளாலும் அணு ஆயுதங்கள் தொடர்ந்து உற்பத்தி செய்யப்படுவதையும், சேமிக்கப்படுவதையும், உபயோகிக்கப்படுவதையும் சட்டபூர்வமாக்குகிறது. ஆயுதப் பரிகரணத்திற்கு முரணுகச் செல்கிறது.

### புனித கடமை

உலக மக்கள் அணு ஆயுத பரிசோதனைகளின் சம்பூரண நிறுத்தத்தைக் கோருகின்றனர். இந்த உடன்படிக்கை நிலத்தின் கீழான அணு ஆயுத பரிசோதனைகளின் தடையைத் தவிர்த்து விடுகிறது. இது அமெரிக்க ஏகாதிபத்தியத்தினுல் செய்யப்பட்ட சாதகமான ஒரு தவிர்ப்பு.

உலக மக்கள் உலக சமாதானத்தின் பாதுகாப்பையும் அணு யுத்த அபாயம் நீக்கப்படுவதையும் கோருகின்றனர். இந்த உடன்படிக்கை உண்மையில் அணு வல்லரசுகளின் அணு ஆயுத பயமுறுத்தாட்டல் வல்லமையைப் பலப்படுத்துகிறது. ஏகாதிபத்தியம் அணு யுத்தத்தையும் உலக யுத்தத்தையும் தொடரும் அபாயத்தை அதிகப்படுத்தியுள்ளது.

இப் பெரும் ஏமாற்று அம்பலப்படுத்தப்படா விட்டால் அது இன்னும் அதிக தீமை செய்ய முடியும். இந்த ஏமாற்றை முற்றுக அம்பலப்படுத்துவதைச் சீன அரசாங்கம் தனது புறக்கணிக்க முடியாத புனித கடமையாகக் கருதுகிறது.

இந்த உடன்படிக்கை அமெரிக்க அணு யுத்தத் தயாரிப்பு, அணு ஆயுத பயமுறுத்தாட்டல் கொள்கைகளின் மீது எந்தவித கட்டுப்படுத்தும் சக்தியையும் செலுத்தவில்லை என்பது தெளிவு.

### அமெரிக்காவிற்கு நன்மை

அமெரிக்க ஜனதிபதி கென்னடி ஜூலை 26ம் திக்தி பேசுகையில் ' இவ்வுடன்படிக்கையின் சாரத்தை வெளிப்படையாக்கினுர். இந்த உடன்படிக்கை அணு யுத்த அபாயத்திற்கு ஒரு முடிவு அல்ல. இது தொடர்ந்தும் நிலத்தின் கீழான அணு ஆயுத பரிசோதனைகளைத்தடை செய்யவில்லை. மாருக அனுமதிக்கிறது. அது அணு ஆயுதங்களின் உற்பத்தியை நிறுத்தாது. இது அணு ஆயுதக் கையிருப்புகளைக் குறைக்காது,

இது யுத்த காலத்தில் அவற்றின் உபயோகத்தைக் கட்டுப்படுத்தாது என கென்னடி சுட்டிக்காட்டினுர்.

இந்த உடன்படிக்கை அமெரிக்கா ''உதவி'' என்ற பெயரில் தனது சகாக்களுக்கும் தன் கட்டுப்பாட்டில் உள்ள நாடுகளுக்மிடையில் அணு ஆயுதங்களைப் பரப்புவதற்கு குந்தகம் செய்யாது, ஆனுல் அணு ஆயுதங்களற்ற சமாதானம் விரும்பும் நாடுகளை அணு ஆயுதங்களைப் பரிசோதிக்க விடாது தடுக்க இதை அமெரிக்கா உபயோகிக்கும் என்று அவர் மேலும் சுட்டிக் காட்டினுர்.

### ''மக்களை ஏமாற்றும்''— தோழர் குருசேவ்

1962, ஆகஸ்ட்டில் ஜெனிவாவில் ஆயுதப் பரிகரண கமிஷன் கூட்டத்தில் அமெரிக்காவும், பிரிட்டனும் முன்வைத்த அணு ஆயுத பரிசோதனைகளின் அரைவாசி தடை உடன் படிக்கை நகலின் மறுபிரதியே இப்பொழுது கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை. அந்த நகலை முன் வைத்ததில் அமெரிக்காவினதும் பிரிட்டனினதும் வெளிப்படையான நோக்கம் சோவியத் யூனியனினதும் மற்ற சோஷலிஸ நாடுகளினதும் நலன்களுக்கு பாதகமான முறையில் மேற்கத்திய வல்லரசுகளுக்கு ஒரு தலைப்பட்சமான சாதகங்களைப் பெறுவதே என சோவியத் பிரதிநிதி குழுத் தலைவர் குஸ்னெற்சோவ் 1962, ஆகஸ்ட் 29ம் திகதி சுட்டிக் காட்டினுர்.

''புதிய ரக அணு ஆயுதங்களை விருத்தி செய்ய அமெரிக்காவில் வரையப்பட்டுள்ள திட்டத்திற்கு இப்பொழுது தேவையானவை நிலத்தின் கீழான பரிசோதனைகளே தான். வாயு மண்டலத்திலான, ஒருவித பரிசோதனையை மட்டும் நிறுத்தும் ஒரு ஒப்பந்தம் சமாதானத்திற்கு ஒரு சேவையாகாது; அது மக்களை ஏமாற்றும்'' என சோவியத் அரசாங்கத் தலைவர் குருச்சேவ் 1961, செப்டெம்பர் 9ம் திகதி கூறினுர்.

### ஆளுக்கொரு நீதி

அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளும் அவர்களின் கூட்டாளிகளும் தாங்கள் அணு ஆயுத பரிசோதனைகளின் அரை குறைத் தடைக்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன. அணு ஆயுதங்களின் பூரண தடையை நோக்கி முதற்படி என எங்கும் ஒரே கூச்சலில் விளம்பரம் செய்கின்றனர். இது ஏமாற்றுப் பேச்சு. அமெரிக்கா ஏற்கனவே பெரும் தொகையான அணு ஆயுதங்களைச் சேகரித்துள்ளது. இவை உலகெங்கும் பரவிக் கிடக்கின்றன, எல்லா மக்களின் பந்தோபஸ்தையும் பயமுறுத்துகின்றன.

அமெரிக்கா உண்மையில் அணு ஆயுதத் தடையை நோக்கி முதல் அடியை எடுத்து வைக்குமானுல், அது ஏன் மற்ற நாடுகளுக்குத் தன் அணு ஆயுத பயமுறுத்தலை நீக்கவில்லை? அணு ஆயுதங்களற்ற நாடுகளுக்கெதிராக அணு ஆயுதங்களை உபயோகிக்காதிருக்கவும், அணு ஆயுத விலக்குப் பிராந்தியங்களை நிறுவும் உலக மக்களின் அவாவை மதிக்கவும் அது ஏன் முன்வரவில்லை? தனது அணு ஆயுதங்களையும் அவற்றின் உற்பத்திக்கான விபரங்களையும் தனது சகாக்களுக்கு எந்தச் சூழ்நிலைகளிலும் கொடுக்காதிருக்க அது ஏன் முன்வரவில்லை? அமெரிக்கா மற்றவர்களுக்கு எதிராக அணு ஆயுத மிரட்டலையும், பயமுறுத்தாட்டலையும் உபயோகிக்கலாம். ஆக்கிரமிப்பு யுத்தக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கலாம். ஆனுல் மற்றவர்கள் அத்தகைய மிரட்டலையும் பயமுறுத்தாட்டலையும் எதிர்க்கவும், தங்களின் சொந்த சுதந்திரத்தையும் விடுதலையையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவும்கூடாது என அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் என்ன காரணம் கொண்டு சாதிக்கமுடியும்? ஆக்கிரமிப்பாளர்களுக்குக் கொல்லும் உரிமை தந்து, ஆக்கிரமிப்பிற்கு இலக்கானவர்களுக்குத் தற்பாதுகாப்பு உரிமையை மறுப்பது—இது: 'நீதிபதிகள் வீடுகளைக் கொழுத்தி எரிக்கலாம். ஆனுல் சாதாரண மக்கள் தங்களின் விளக்குகளைக் கூட கொழுத்தக்கூடாது' என்ற சீனப் பழமொழியைப் போன்றில்லையா இவ்வுடன்படிக்கை என அவ்வறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

சீன அரசாங்கம் அணு யுத்தத்திற்கு உறுதியாக எதிரானது. அது எப்பொழுதும் பொது ஆயுதப் பரிகரணத்தை ஆதரிக்கிறது. அணு ஆயுதங்களின் பூரணத் தடையையும் முற்றுன ஒழிப்பையும் திடமாக ஆதரிக்கிறது. இந்த இலக்கைப் படிப்படியாக அடைவதற்கான தமது முயற்களைச் செய்யச் சீன அரசாங்கமும் மக்களும் ஒரு போதும் தவறியதில்லை. முழு உலகிற்கும் தெரிந்தவாறு, சீன அரசாங்கம் நெடுங்காலத்திற்கு முன்பே, ஆசிய, பசுபிக் பிராந்தியத்தில், அமெரிக்கா உட்பட அணு ஆயுதங்கள் இல்லாத ஒரு பிராந்தியத்தை நிறுவுவதைப் பிரேரித்தும், அதைத் தொடர்ச்சியாக ஆதரித்தும் வந்துள்ளது என அதில் கூறப்பட்டுள்ளது.

### சீனத்தின் பிரேரணை

அணு ஆயுதங்களைத் தடை செய்வது, அணு யுத்தத்தைத் தடுப்பது போன்ற முக்கிய பிரச்சினைகளில் உலக மக்களை ஏய்க்கும் முறையை அனுஷ்டிப்பதை அனுமதிக்கக்கூடாததென சீன அரசாங்கம் கருதுகிறது. அணு ஆயுதங்கள் சம்பூரணமாகத் தடை செய்யப்படவும், முற்றுக ஒழிக்கப்படவும் வேண்டும் என்பதும், அணு ஆயுதங்களின் சம்பூரணத் தடையையும் முற்றுன ஒழிப்பையும் படிப்படியாக அடையவும் அணு யுத்தத்தைத் தடுக்கவும் உலக சமாதானத்தைக் காக்கவும் பயன்தரவல்ல செயல்முறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதும் ஐயந்திரிபற உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இக் காரணங்களுக்காக, சீன மக்கள் குடியரசு அரசாங்கம் கீழ்காணும் பிரேரணையை முன்வைத்துள்ளது.

1 அணு ஆயுதங்களைக் கொண்டவையும் அணு ஆயுதங்களற்றவையுமான எல்லா உலக நாடுகளும் தாம் அணு ஆயுதங்களை முற்றுகவும் சம்பூரணமாகவும் மொத்தமாகவும் உறுதியாகத் தடை செய்து ஒழிக்கும் என பொறுப்பாகப் பிரகடனம் செய்வது. திட்டவட்டமாகக் கூறுவதானுல், அவை அணு ஆயுதங்களை உபயோகிக்கவோ, ஏற்றுமதி செய்யவோ, இறக்குமதி செய்யவோ, உற்பத்தி செய்யவோ, பரிசோதிக்கவோ, சேமித்து வைக்கவோ மாட்டா; அவை உலகிலுள்ள எல்லா அணு ஆயுதங்களையும் அவற்றின் விநியோக சாதனங்களையும் ஒழித்துவிடும். உலகிலுள்ள அணு ஆயுத ஆராச்சி, பரிசோதனை, உற்பத்தி ஸ்தாபனங்கள் அனைத்தையும் கலைத்துவிடும்.

அணு ஆயுதங்கள் தடை செய்யப்பட முடியும், அணு யுத்தம் தடுக்கப்பட முடியும் என சீன அரசாங்கமும் மக்களும் ஆழ்ந்த நம்பிக்கைகொண்டுள்ளனர். சோஷலிஸ முகாமிலுள்ள நாடுகளையும் உலகின் சமாதானம் விரும்பும் எல்லா நாடுகளையும் மக்களையும் ஐக்கியமுற்று, அணு ஆயுதங்களின் முற்றுன, சம்பூரண, மொத்தமான உறுதியான தடைக்கும் ஒழிப்புக்குமாகவும், உலக சமாதானத்தின் பாதுகாப்பிற்காகவும் ஈடாட்டமின்றி இறுதிவரை போராடுமாறு நாம் அழைக்கிறேம் என முடிவில் அவ்வறிக்கை வேண்டுகிறது.

# தோட்டத் தொழிலாளர்களின் ஐக்கியம் அவசியம்

## கோரிக்கைகளை வென்றெடுக்க ஒன்றுபடுமாறு இ. தோ. தொ. சங்கத்தின் வேண்டுகோள்

''இன்று இந்த நாட்டிலுள்ள சகல தொழிலாளர்களும் தமது கோரிக்கைகளை வென்றெடுக்க அணிதிரண்டு வருகின்றனர். அதில் முக்கியமானதாக நாளொன்றுக்கு ரூ. 1/- சகல தொழிலாளர்களுக்கும் கூட்டப்படவேண்டும் என்ற கோரிக்கை விளங்குகிறது. ஆகவே தோட்டத் தொழிலாளர்களும் இந்தப் போராட்டத்தில் ஏனைய தொழிலாளர்களோடு ஒன்றுபடுவது அவசியமானது. அதன் மூலம் தோட்டத் தொழிலாளர்களை ஏனைய தொழிலாளர்களிடமிருந்து இந்திய எதிர்ப்புப் பிரச்சாரத்தின் மூலம் பிரிக்க நினைக்கும் பிற்போக்குவாதிகளினதும் அரசாங்கத்தினதும் மோசமான கொள்கையை முறியடிக்க முடியும். கோரிக்கையை வென்றெடுக்க முடியும். ஆதலால் இப்போராட்டத்திற்கு சகல தோட்டத்தொழிலாளர்களையும், தொழிற் சங்கங்களையும் ஒன்று திரளும்படி வேண்டுகிறேம்'' எனக்கோரி இலங்கைத் தோட்டத் தொழிலாளர் (செங்கொடி) சங்கம் அண்மையில் ஓர் சுற்றறிக்கையை சகல தோட்டத் தொழிலாளர் சங்கங்களுக்கும் அனுப்பியுள்ளது.

மேலும் இச்சுற்றறிக்கையில் ''தோட்டத் தொழிலாளர்களின் பொதுக் கோரிக்கைகளை வென்றெடுக்கும் வழிவகைகளை ஆராய ஓர் பேச்சுவார்த்தைக்கு வரும்படியும், இந்த நாட்டிலுள்ள ஏனைய சகல தொழிற் சங்கங்களும் ஒன்றுபட்டு, ஐக்கிய போராட்டம் நடத்த முனைகின்ற இந்த நேரத்தில் தோட்டத்தொழிலாளர்களின் தொழிற்சங்கங்கள் அதிலிருந்து பிரிந்து தனிப் போராட்டம் நடத்த முனைவது தவறு'' எனவும் அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

இலங்கையிலுள்ள தொழிலாளர்களில் மிகக் குறைந்த சம்பளம் பெருகின்றவர்கள் தோட்டத் தொழிலாளர்கள். அவர்களுக்கு அரசாங்க அளவு பஞ்சப்படி கிடையாது, அதற்கும் மேலாக பெரும்பாலான தொழிலாளர்கள் பெறுகின்ற ரூ. 17/50 விஷேச பஞ்சப்படியும் அவர்களுக்குவழங்கப்படுவதில்லை. ஆகவே இக் கோரிக்கை தோட்டத் தொழிலாளர்களுக்கு மிகவும் முக்கியமானது. அதே நேரத்தில் சக்தி பெற்ற தோட்ட முதலாளிகளிடமிருந்து இதைப் பெற்றெடுப்பது இலகுவானதல்ல. சகல தோட்டத் தொழிலாளர்களுடைய ஐக்கிய போராட்டத்தின் மூலம் மாத்திரமே இப்போராட்டத்தில் வெற்றிபெற முடியும் எனவும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இவ்வித முக்கியமான கோரிக்கைக்கான போராட்டத்தில் தனிப் போக்கோ, தற்பெருமை தேடும் எண்ணமோ தவருனதென்றும், அவ்விதம் சிலர் இயங்கிக்கொண்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ள இ.தோ.தொ. சங்கம் இப்போக்கினை மாற்றி ஓர் ஐக்கியப் போராட்டம் நடத்த, அதற்காக கூட்டு ஆலோசனை நடத்தவரும்படிகோரி இ.தொ.கா., ஐ.தொ.கா., ல.தோ.தொ. சங்கம் ஆகியவற்றிற்கு அழைப்புவிடுத்துள்ளது.

**பிழை திருத்தம்**

ஐந்தாம் பக்கத்திலுள்ள ''மக்கள் சீனத்தின் மகத்தான வளர்ச்சி'' என்ற கட்டுரை எமது விசேஷ நிருபரும், பிரபல அமெரிக்க பெண் எழுத்தாளருமான அன்ன லூயி ஸ்ரோங் அவர்கள் எழுதியது

தலையங்கம்

# ஆட்சியின் பங்கலோட்டுத்தனம் அம்பலமாயிற்று !

சோஷலிஸம் அமைப்போம், சுதந்திரத்தைப் பூரணப்படுத்துவோம், தாயகத்தை குடியரசாக்குவோம், வறுமையை ஒழிப்போம், வேலையில்லாத்திண்டாட்டத்தை தீர்ப்போம், தொழிலாளர் கஷ்டங்களை நீக்குவோம், இனப்பிரச்சினைக்கு முடிவுகாண்போம் என்ற இந்தக்குரல் நான்கு ஆண்டுகளுக்கு முன்பதாக நம் நாடெங்கும் எதிரொலித்தது.

இந்தக் கோஷத்தை அன்று முழங்கியவர்கள் வேறு யாருமல்ல. இன்று ஆட்சிபீடத்தில் அமர்ந்திருக்கின்ற திருமதி பண்டாரநாயக்காவின் திருக்கூட்டம்தான். சுதந்திரக் கட்சியின் தலைவர்கள்தான் அப்பொழுது இவ்வித வாக்குறுதிகளை அளித்தார்கள். காலஞ்சென்ற பண்டாரநாயக்கா அவர்களின் கொள்கைகளை முன்னெடுத்துச்செல்ல எங்களுக்கு ஆட்சிப்பொறுப்பைத் தாருங்கள் என்று எட்டுத் திக்கிலும் சென்று வாக்குக் கேட்டார்கள்.

பல ஆண்டுகாலமாக யூ. என். பி. யின் சுரண்டல் ஆட்சியால் அவஸ்தைப்பட்ட மக்கள் இவர்களுக்கு ஆதரவளித்தார்கள். இவர்களின் மூலம் 1956ல் பெற்ற வெற்றியை முன்னெடுத்துச் செல்லவிரும்பினர்கள். யூ.என்.பி.மேல் கொண்ட வெறுப்பினல், தமது வாழ்க்கை வளம்பெற வேண்டும் என்ற அவாவினல் மக்கள் சுதந்திரக் கட்சிக்கு வாக்களித்தார்கள். ஆட்சி அதிகாரத்தையும் பெற்றுக்கொடுத்தார்கன்.

அவ்விதம் சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்து நான்கு ஆண்டுகளாகிவிட்டன. நடந்தது என்ன? பெற்ற பலன் என்ன? கொடுத்த வாக்குறுதிகளின் கதியென்ன? இவை இன்று மக்கள் மன்றத்தில் உள்ள பெரும் கேள்விகளாகும். இக்கேள்விகளைக் கேட்கும் மக்களின் தொகை அண்மையில் அதிகரித்துள்ளது.

இதற்கெல்லாம் காரணம் அண்மையில் நிகழ்த்தப்பட்ட சிம்மாசனப் பிரசங்கம் தான். திருமதி பண்டாரநாயக்காவின் ஆட்சியினர் தமது இவ்வருடத்திய வேலைத்திட்டத்தை அதன்மூலம் சமர்ப்பித்தனர். கடந்த மூன்று வருடங்களிலும் அமுல் நடத்தத் தவறிய தமது தேர்தல் திட்டத்தை இவ்வருடமாவது நிறைவேற்றுவார்கள் என பலர் எதிர்பார்த்தனர். அந்த சிறிய நம்பிக்கையும் இப்பொழுது தகர்த்தெறியப்பட்டுவிட்டது.

நாட்டிலே உருவாகியுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கு, நாட்டு மக்களின் கஷ்டங்களை குறைப்பதற்கு, தொழிலாளவர்க்கத்தின் தொல்லைகளைத் தொலைப்பதற்கு, இன ஒற்றுமையை வளர்ப்பதற்கு இந்தப் பிரசங்கத்தில் எந்தவித திட்டங்களையும் மக்களால் காணமுடியவில்லை.

நாளுக்குநாள் கூடிவருகின்றவிலைவாசிகளும், உயர்ந்துவரும் வாழ்க்கைச் செலவும் அதனல் பொதுமக்களும், தொழிலாளவர்க்கமும் அனுபவித்துவரும் துன்பச் சுமைகளும் நாடறிந்த பேருண்மை. இதனல் தொழிலாளர் மத்தியில் உருவாகிவரும் கொந்தளிப்பை, மனக்குமுறலை, வேலைநிறுத்தப் போராட்டங்களைத் தவிர்க்கவும் எந்தவித யோசனைகளையும் ஆட்சியினர் தெரிவிக்கவில்லை.

இன்று வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துவருகின்றது. அதே நேரத்தில் வேலையில் இருப்பவர்களும் அரசாங்கத்தின் பிழையான கொள்கையின் காரணமாக வேலையிழந்து வருகின்றனர். அரசாங்கத்தின் சம்பளம் உயரக் கூடாது என்ற கொள்கை ஒருபக்கத்தில் தொழிலாளர்களை மேலும் கஷ்டப்படுத்துவதாகவும், மறுபுறத்தில் கொள்ளை லாபமடிக்கும் முதலாளிகளுக்கு மேலும் உதவுவதாகவும் உள்ளது. இந்நிலையை மாற்றவும் ஆட்சியினர் எண்ணியுள்ளதாகத் தெரியவில்லை.

பொருளாதார நெருக்கடி என்றெல்லாம் பிதற்றுகின்ற அரசாங்கம் இந்த நாட்டிலிருந்து அண்ணிய கொள்ளைக் கும்பலினல் அள்ளிச் செல்லப்படுகின்ற செல்வத்தை, லாபத்தை தடுக்கவும் விரும்புவதாகத் தெரியவில்லை. அண்ணிய மூலதனங்களை தேசியமயமாக்குவது என்ற கொள்கையை ஆட்சியினர் மறந்துவிட்டதாகத் தெரிகிறது. எண்ணை விற்பனையை தேசியமயமாக்குகின்ற அதேநேரத்தில் கூடுதல் வருமானத்தைத் தருகின்ற எண்ணையை தொட்டியில் தேக்கிவைக்கும் பொறுப்பினை அரசாங்கம் அன்னியரிடமே விட்டுவைத்துள்ளது.

வங்கி தேசிய மயத்தைப் பற்றி பிரசங்கத்தில் ஒரு வார்த்தைகூட குறிப்பிடப்படவில்லை. மத்திய வங்கியிலும், வெளியிலும் உள்ள பிற்போக்குவாதிகளின் தலையீடே இதற்குக் காரணம் எனக் கருதப்படுகிறது. இதே போன்ற அன்னிய தோட்டங்களின் தேசியமயமும் அரசாங்கத்தின் நினைவிலிருந்து மறைந்துவிட்டது.

தாய்நாட்டை குடியரசாக்கி, எஞ்சியுள்ள ஆங்கில ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்தை அழிக்கின்ற கொள்கையும் அரசாங்கத்தின் பிரசங்கத்திலிருந்து முதல் முறையாக அகற்றப்பட்டுள்ளது. அதேபோல் தேசிய சிறுபான்மை மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க வழிவகுப்பதாகக்கூறிய அரசாங்கம் நாலாவது பிரசங்கத்திலும் எவ்வித திட்டத்தையும் முன்வைக்கத் தவறிவிட்டது.

சுருக்கமாகக் கூறின் ஆட்சியினரின் பங்கலோட்டுத்தனம் சிம்மாசனப் பிரசங்கத்தின்மூலம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. தங்களுக்குள் தோன்றியுள்ள வேற்றுமைகளுக்கு ஓட்டுப்போட்டு, ஐந்து ஆண்டுக்கும் தம் அதிகாரத்தை நீடிக்க வேண்டுமென்ற எண்ணத்தின், பதவிவேட்கையின் பிரதிபலிப்புத்தான் இப்பிரசங்கம்.

இந்த நிலைமை நீடித்தால் தொழிலாளவர்க்கத்திற்கு பொதுமக்களுக்கு மேலும் துன்பமும், துயரமும் வளரும். நாட்டின் பொருளாதாரம் சீர்குலையும். அன்னிய ஏகாதிபத்தியத்தின், உள்நாட்டு பிற்போக்குவாதிகளின் நாசவேலைகளுக்கு இடம் கிடைக்கும்.

ஆகவே நாட்டிலே மாற்றம் காண, நாட்டு மக்களும் தொழிலாளி வர்க்கமும் வாழ்வு காண மார்க்கம் காண்பது இந்தநாட்டு தொழிலாளி வர்க்கத்தின், பொதுமக்களின் முற்போக்குவாதிகளின் கடமையாகும். இவர்களின் ஒன்றுபட்ட போராட்டமே இந்த மாற்றத்தைக் கொண்டுவரக்கூடியது. ஆகவே ஒற்றுமை வளர்ப்போம்; வாழ்விலே உயர்வு பெற போராட முன்வருவோம்.


# போராட்டம் மூலம் துன்பங்கள் துடைப்போம்

## தலைவர் நடேசன் பேச்சு

வாழ்க்கைச் செலவைக் குறைக்க அரசாங்கம் தவறிவிட்டது. இதனல் சகல தொழிலாளிவர்க்கமும், பொதுமக்களும், குறிப்பாக குறைந்த சம்பளம் பெற்றுக்கொண்டிருப்பவரும் இந்த நாட்டில் தொழிலாளர்களில் 60 வீதமும் 80 வீத வருமானத்தை தேடித் தருபவருமான தோட்டத் தொழிலாளி பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளதாக கடந்த மாதம் ஹட்டனில் நடைபெற்ற தோட்டத் தலைவர்கள் கூட்டத்தில் பேசிய இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. எஸ். நடேசன் அவர்கள் குறிப்பிட்டார்.

மேலும் பேசுகையில் ''இந்தக் குறையை நீக்கும் எண்ணத்தோடு எமது சங்கம் அரசாங்க அளவு பஞ்சப்படி தோட்டத் தொழிலாளர்களுச்கு வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருக்கிறது. இந்த பொதுக் கோரிக்கையை வென்றெடுக்க ஒன்றுபடுமாறு ஏனைய தோட்டத் தொழிலாளர் சங்கங்களையும் நாம் கேட்டுக்கொள்கிறோம்'' எனக்கூறினர்.

''கடந்த சில வருடங்களில்



தேயிலை உற்பத்தி அதிகரித்திருக்கிறது. அதன்மூலம் முதலாளிமார் கொள்ளை லாபம் பெற்றுள்ளனர். ஆதலால் அரசாங்க அளவு பஞ்சப்படியை தோட்ட முதலாளிமார்கள் தொழிலாளர்களுக்கு வழங்க முன்வரவேண்டும், குறைந்த பட்சம் உடனடியாக ரூபா 17–50 சதமாவது வழங்க முதலாளிமார் முன்வரவில்லையானல் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வது தான் அவர்களுக்குள்ள ஒரே வழி'' என தொடர்ந்து பேசுகையில் தோழர் நடேசன் குறிப்பிட்டார்.

தோட்டத் தொழிலாளர்களின் இவ்வித நியாயமான கோரிக்கைக்கு இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம்தன் முழு ஆதரவையும் அளிக்கும் எனக் கூறியதோடு, தோட்டத் தொழிலாளர்களின் துன்பம் நிறைந்த வாழ்க்கையைப் பார்த்துக்கொண்டு வீணே காலம் கடத்திய காலம் மலையேறிவிட்டதெனவும் புதிய வாழ்வு காணும் போராட்டத்திற்கு தோட்டத் தொழிலாவர்கள் தயாராக வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

# என்ஜினியரிங் தொழிலாளர்களின் தீர்மானங்கள்

1963 ஜுலை 24ம் திகதி ஐக்கிய இன்ஜினியரிங் தொழிலாளர் சங்கத்தைச் சார்ந்த கிளைக் கமிட்டியினர் கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்தில் பின் வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

1 1963–64ம் ஆண்டு புதிய உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுக்காத சகல கிளைகளும் உடனடியாக வருடாந்த பொதுக்கூட்டம் கூடி புதிய உத்தியோகஸ்தர்களைத் தெரிவு செய்ய வேண்டும். மேலும் பாக்கியுள்ள சந்தாப் பணத்தைப் பூர்த்திசெய்யவேண்டும்.

2 (அ) ஐக்கிய இன்ஜினியரிங் தொழிலாளர் சங்கத்தின் 19வது சம்மேளனத்திற்கு 25 பிரதிநிதிகளுக்கு ஒரு பிரதிநிதி வீதம் தெரிவுசெய்யவேண்டும்.

(ஆ) சகல கிளைக் காரியதரிசிகளும் வரவேற்புக் கமிட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

3 எதிர்வரும் மாபெரும் வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு ஆயத்தப்படுத்துகின்ற அதே வேளையில், போராட்ட நிதிக்கு நபருக்கு ஒரு ரூபா வீதம் சேகரித்து இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்திற்கு அனுப்ப வேண்டும்.

4 வெள்ளவத்தை ஆலைத் தொழிலாளரின் போராட்டத்திற்கு ஆதரவாக ஒவ்வொரு அங்கத்தவரும் ஒரு ரூபா வீதம் கொடுக்கவேண்டும்.

5 சகல கிளைகளும் உடனடியாகத் தனது கூட்டத்தைக் கூட்டி மேற்படி தீர்மானங்களைத் தனது அங்கத்தவர்களுக்கு விளக்கி, அவற்றை அமுல்படுத்த முன்வர வேண்டும்.

# ஐ. நா. சபையிலிருந்து தென் ஆபிரிக்காவை வெளியேற்று!

தென் ஆபிரிக்க அரசாங்கத்தின் நிறவெறி காரணமாக அந்த நாட்டு சுதேசி மக்கள் கேவலமான முறையில் கொடுமைப்படுத்தப்படுவது தெரிந்ததே. அம் மக்களுக்கு சாதாரண மனித உரிமைகள்கூட மறுக்கப்பட்டுள்ளன. ரத்த வெறி பிடித்த, கொடூரமான முறையில் அம்மக்கள் நசுக்கப் படுகிறார்கள்.

நிறவெறியை எதிர்க்கக் கூடிய சகல முற்போக்கு ஸ்தாபனங்களும் அந்த நாட்டில் தடைசெய்யப் பட்டுள்ளது. பெண்களும் பிள்ளைகளும் உட்பட 67000 மக்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். வேலைநிறுத்தத்தில் பங்குகொள்ளக் கூடிய தென் ஆபிரிக்க மக்களுக்கு மரண தண்டனை அளிக்கக்கூடிய முறையில் தற்பொழுது அந்தநாட்டிலே சட்டம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

இவ்விதமான தென்ஆபிரிக்க அரசாங்கத்தின் போக்குஐ.நா. சபையினுலும், உலக தொழில் ஸ்தாபனத்தினுலும் ஏனைய முற்போக்கு சக்திகளினுலும் பலமுறை கண்டிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் தென் ஆபிரிக்க அரசாங்கம் தன் வெறித்தனத்தை மாற்றுவதாக இல்லை.

ஆகவே தினமும் ஐ.நா.சாசனத்தை மீறி நடந்துகொண்டிருக்கக்கூடிய தென் ஆபிரிக்காவை ஐ. நா. சபையிலிருந்து வெளியேற்றும்படியும், அந்த அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டுள்ள நாடுகள் தம் தொடர்பை துண்டித்துக் கொள்ளவேண்டுமெனவும் 12 கோடி அங்கத்தவர்களைக் கொண்ட உலக தொழிற்சங்க சம்மேளனம் ஓர் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. (இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் உ. தொ. ச. சம்மேளனத்தில் ஒரு அங்கத்தவர்)

இத்தீர்மானத்தை ஐ. நா. சபைத் தலைவருக்கு அனுப்பியுள்ளதோடு, இவ்வித நடவடிக்கைகளை எடுப்பதின்மூலம் தென் ஆபிரிக்க மக்களுக்கு உதவிசெய்ய முடியுமென்ற கருத்தையும் உ. தொ. ச. சம்மேளனம் தெரிவித்துள்ளது.

# ஹர்த்தால் கற்பித்த பாடங்கள்!

இந்த வருடம் நாம், 1953 ஆகஸ்ட் 12ல் நடைபெற்ற புகழ் மிக்க ஹர்த்தாலின் 10 வது ஆண்டு விழவைக் கொண்டாடுகிறோம். அன்றிருந்த யூ. என். பி. அரசாங்கத்தின் அடித்தளத்தையே அக் ஹர்த்தால் நிலை குலைத்தது. டட்லி சேனநாயக்காவை ஆட்சிப்பீடத்திலிருந்து அகற்றியது. அந்த மகத்தான நாளிலிருந்து 10 வருடங்கள் கழிந்து விட்டன. இந்தப் பத்து வருடங்களில்இலங்கை மக்கள்பல முன்னேற்றத்தை அடைந்துள்ளனர். இருப்பினும் இன்று வரை இணையற்ற மா பெரும் அரசியற் போராட்டமாக 1953 ஆகஸ்ட் 12 விளங்குகிறது.

இன்று தொழிலாளி வர்க்கம் புதிய சூழ்நிலையில் புதியதோர் போராட்டத்திற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறது. ஆகவே இவ்வித சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியிலிருந்து எதிர்கால போராட்டங்களுக்குரிய சரியான போதனைகளைப் பெற்றுக் கொள்வது அவசியமாகும்.

டுள்ளது. அவர்களும் அதே முடிவை ஏற்படுத்துவார்கள் என்பதில் ஐயமில்லை. ஒரு நாள் ஹர்த்தாலுக்கான யோசனையையும் இ.தொ.ச. சம்மேளனம் தான் முதலில் முன்வைத்தது. ஆனுல் ஹர்த்தால் வெற்றிபெற்றதிற்கு ஏதாவது ஒரு அரசியல் கட்சியோ, சங்கமோ காரணம் என்று நாம் கூறமுயலவில்லை. பதிலாக மூன்று இடது சாரிக் கட்சிகளாலும், இடது சாரி தொழிற்சங்கங்களாலும், வாலிப இயக்கங்களினுலும் ஐக்கியமாக நடத்தப்பட்டமையினுலேயே ஹர்த்தால் வெற்றிபெற்றது.

முற்போக்கு சக்திகளில் ஐக்கிய அழைப்புக்கு ஆதரவு கொடுக்க மக்கள் முக்கியமாக தொழிலாளிவர்க்கம் தயார் என்பதை ஹர்த்தால் பூரணமாக நிரூபித்தது, ஐக்கிய போராட்டத்தின் மூலம் எதை அடையமுடியும் என்பதற்கு 1953 ஹர்த்தால் ஓர் சிறந்த உதாரணமாகும். இன்று நாங்கள் மேலும் முன்னேறி விட்

காலையில் வேலை வழமைபோல் நடைபெறுகிறது என்ற தலைப்புடன் வெளிவந்தன) அரசாங்கம் போலிஸ், ராணுவ சக்தியை திரட்டியிருந்தது. ஆனுல் இத்தனைக்குமிடையில் கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் அதிகாலையிலேயே வேலை ஸ்தம்பித்தது. பஸ்கள் அசையவில்லை. அவ்விதம் ஓடமுனைந்தவை நொறுக்கப்பட்டு வீதியோரங்களில் மக்களின் புரட்சிகர போராட்டம் செய்யக்கூடியது எது என்பதை நினைப்பூட்டுவனவாக விடப்பட்டன. மரங்கள்பெயர்க்கப்பட்டு,வீதிக்குறுக்கே போடப்பட்டன. புகையிரதப் பாதைகள் பெயர்க்கப் பட்டன. துப்பாக்கிமுனையில் கலைந்து போகும்படி உத்தரவிடப்பட்டும் அதற்குப் பணிய மறுத்து, மக்கள் வீர உணர்ச்சியை வெளிக்காட்டினுர்கள்.

தலைவர்கள் சரியான புரட்சிக்கு தலைமை கொடுத்தால் புரட்சிகர பாதையில் செல்வதில் எமது நாட்டு தொழிலாள வர்க்கமும், பொது மக்களும் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல என்பதை ஹர்த்தால் நிரூபித்துக் காட்டியது.

ஹர்த்தர்லில் தொழிலாளிவர்க்கம் தலைமை தாங்கியதென்பது தான் மூன்ருவது குறிப்பிடவேண்டிய அம்சமாகும். தொழிலாளர்களின் வேலை நிறுத்தமே ஹர்த்தாலின் வெற்றிக்கு பெரும்பாலும் உதவியது. கிராமப்புறங்களிலும் குறிப்பாக மேல்,தென் மாகாணங்களிலுள்ள பொதுமக்கள் முழு மனதுடன் போராட்டத்தில் கலந்து கொண்டது உண்மையே. ஆனுல் முக்கியமான தாக்குதல் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தின் மூலமே ஏற்பட்டது. தொழிலா

## தொழிலாளி வர்க்கம் தலைமை தாங்கியது

இந்த நாட்டு மக்களின் புரட்சிகர போராட்டத்தின் உயர்ந்த நிலையை அந்த நாள் கண்டது. அந்த நாள் நிகழ்ச்சியில் ஈடுபடும் நல்ல பாக்கியம் பெற்றவர்களின் மனதிலிருந்து என்றைக்கும் அந்த நாளின் நினைவு மாருது. எங்களின் ஆட்சியாளர்களின் இருதயத்திலேயே கிலி ஏற்படுத்திய நாள் அது. ஏற்பட்ட பயத்தினுல் துறைமுகத்திற்கு ஓடிப் போய் கப்பலுக்குள் மந்திரிசபைக் கூட்டம் நடத்தியதாக அக்காலத்தில் வெகுவாகப் பேசப்பட்டது. எதிர்காலப் போராட்டங்களில் கூடுதலான புரட்சிகரதன்மைகளை இந்த நாட்டு தொழிலாளிவர்க்கமும், பொதுமக்களும் பெறுவதற்கு, அந்த நாள் அனுபவங்களை நன்கு அவர்களுக்கு ஊட்ட வேண்டும்.

★★★★★★★★★★★★

**N. சண்முகதாசன்**

★★★★★★★★★★★★

ளர்கள் தலைமைவகித்த காரணத்தினுல் தான் கிராமப்புற மக்களின் ஒத்துழைப்பைப் பெறமுடிந்தது. இந்த உண்மையை என்றும் மறந்துவிடக்கூடாது.

மாபெரும் ஹர்த்தாலின் 10வது ஆண்டுவிழாவை கொண்டாடிக் கொண்டிருக்கின்ற இவ்வேளையில், நாம் மீண்டும் புதிய, பெரிய புரட்சிகர போராட்டங்களை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, ஹர்த்தால் எமக்குத் தந்த போதனையை நாம் நன்கு தெரிந்து கொள்ளவேண்டும். எதிர்காலத்தில் பெரிய புரட்சிகர செயல்முறைக்கு மகத்தான ஹர்த்தால் நினைவு ஊக்கமளிக்கட்டும். ஏகாதிபத்திய, நிலப் பிரபுத்துவத்தை முற்ருக முறியடித்தது சோஷலிசத்திற்கு பாதை அமைக்க தொழிலாளிவர்க்கத்தை ஒன்றுசேர்த்து முன்னேறுவோமாக.

# ஒரே வழி- ஒரே முடிவு!

பொருளாதாரநெருக்கடி 1952ல் நாட்டிலே பெரிய உருவம் எடுத்திருந்தது, இதனுல் டட்லி சேனநாயக்கா அரிசியின் விலையை ஏற்றினுர். மற்றும் சமூக உதவிகளை குறைத்தார். இதன் காரணமாக ஹ்ர்த்தால் இடம்பெற்றது. ஏகாதிபத்திய பொருளாதார ஆதிக்கத்தை முறியடித்து, முற்போக்கான தேசிய பொருளாதாரத்தை உருவாக்க யூ என் பி மறுத்ததின் காரணமாகவே அந்த நெருக்கடி தோன்றியது. சுதந்திரக் கட்சி அரசாங்கமும் சில வேறுபாடுகளைத் தவிர ஏகாதிபத்திய ஆதிக்கத்திற்கு சரணுகதியடையும்அதே கொள்கையைத்தான் கடைப் பிடித்து வருகிறது

ஏழு வருடங்களாக இந்த நாட்டில் சுதந்திரக்கட்சி அரசாங்கம் ஆட்சி புரிந்துள்ளது. அவ்விதமிருந்தும் எங்களுடைய பொருளாதாரத்தின் முக்கிய பகுதி அன்னிய ஏகாதிபத்தியவாதிகளின் கையிலேயே இருக்கிறது. கைத்தொழில் அபிவிருத்தி கஞ்சத்தனமான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.அதன் காரணமாக பொருளாதாரத்திலோ வேலையில்லாத் திண்டாட்டத்திலோ எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்த முடியவில்லை. அதிகரித்துவருகின்ற மக்கள் தொகைக்கு ஈடுசெய்யக்கூடிய அளவுக்காவது விவசாய உற்பத்தி முன்னேறவில்லை. மொத்தத்தில் 1952ல் யூ. என் பியை கௌவிப்பிடித்த அதே பொருளாதார நெருக்கடி மீண்டும் அதேபோல் சுதந்திரக்கட்சியைப் பிடித்துள்ளது. இது ஆச்சரியத்திற்குரியதல்ல. ஒரே விதமான கொள்கை ஒரே விதமான முடிவை ஏற்படுத்தும்

ஏற்பட்ட நெருக்கடியின் சுமையை மக்களின் மேல் திணிக்க யூ என் பி முனைந்தமையே 1953ஆகஸ்ட் ஹர்த்தாலை தூண்டிவிட்டது. இன்று சுதந்திரக் கட்சி அரசாங்கமும் அதே வேலையை செய்வதில் ஈடுபட்

டோம். இடதுசாரி ஐக்கிய முன்னணி அமைக்கப்பட்டுவிட்டது. இன்று தோன்றிவரும் தொழிலாளர்களின் வேலைநிறுத்தப்போராட்டங்களுக்கு உறுதியான தலைமையளிப்பது இடதுசாரி ஐக்கியமுன்னணியின் தலையாயகடமையாகும். தொழிலாளிவர்க்கத்திற்கு ஐக்கிய அழைப்பு ஒன்று தொழிற்சங்க மத்தியஸ்தாபனங்களிலிருந்து மாத்திரமல்லாது இடதுசாரி ஐக்கிய முன்னணியிடமிருந்தும் வருமேயாஞல் போராட்டத்தில் ஐம்பது வீதம் வெற்றி கிடைத்து விட்டதாகவே கருதப்படும். ஹர்த்தாலில் நாம் படிக்கவேண்டிய முதற்பாடம் இதுவாகும்

## புரட்சிகரப் போராட்டத்தின் சிறந்த உதாரணம்

பாராளுமன்றத்திற்கு வெளியே இந்த நாட்டு தொழிலாளி வர்க்கத்தால் நடத்தப்பட்ட போராட்டத்திற்கு மிகப்பெரிய உதாரணம் ஹர்த்தாலாகும். இது கவனத்திற்குரிய இரண்டாவது காரணமாகும்: இன்று இடதுசாரி இயக்கத்தில் சில பகுதியினர் தொழிலாளர்களின் முழுச் சக்தியையும் பாராளுமன்ற போராட்டத்தில் செலவிட முனைகின்ற வேளையில், ஹர்த்தால் நினைவு சிந்தனைக்கு ஓர் புதுத் தென்றலாக அமைகிறது. 1953ல் தமது துன்பத்தை துடைப்பதற்கு தொழிலாளிவர்க்கமும், மக்களும் பாராளுமன்றத்தை மாத்திரம் நம்பியிருக்கவில்லை. அரிசி விலையைக் குறைப்பதற்கு அடுத்த பாராளுமன்றத் தேர்தலை எதிர்பார்த்து தமது போராட்டத்தை பின் போடவுமில்லை. பதிலாக அவர்கள் நேரடிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போராட்டம் புரட்சிகரமாக இருந்தது!

முதலாளித்துவப் பத்திரிகைகள் பொய்ப் பிரசாரங்களை நடத்தின. (1953 ஆகஸ்ட் 12ந் திகதி

### அப்புத்தளையில் செங்கொடிச் சங்கம் வளர்கிறது

அப்புத்தளையைச் சேர்ந்த பிலக்வுட் தோட்டம்பத்கொட டிவிஷனில் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தோட்டக் கமிட்டிக்கூட்டம் மாவட்ட பொதுக்காரியதரிசியின் தலைமையில் நடைபெற்றது.

ஏராளமான ஆண் பெண் தொழிலாளர்கள் செங்கொடிகளை ஏந்திய வண்ணம் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மாவட்டப் பிரதிநிதி தோழர் எஸ். மாரியப்பா செங்கொடியை ஏற்றி வைத்துப் பேசுகையில், தோட்ட முதலாளியார்கள் இனியும் செங்கொடியை எதிர்த்து நிற்க முடியாதென்றும், தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு இணங்கவேண்டுமென்றும், இல்லையென்ருல் இதற்காக செங்கொடிச் சங்கம் நிச்சயமாகப் போராடுமென்றும் குறிப்பிட்டார்.

அடுத்து பேசிய தோழர் N.S. நாராயணசாமி தான் சோவியத் நாட்டில் இருந்த சமயம் அங்கு பல தொழிற்சாலைகளுக்குச் செல்லும் சந்தர்ப்பம் கிடைத்ததென்றும், அங்கு தொழிலாளர்கள் பல துறைகளிலும் முன்னேற்றமடைந்திருப்பதாயும். அதன்படி நமது நாட்டு மக்களும் சோஸலிஷ பாதையில் சென்ருல் சோவியத் நாட்டு மக்களைப்போல் வாழமுடியுமென்றும் குரிப்பிட்டார்,

தோழர் V. அங்கமுத்து (ஜில்லாப் பொதுக் காரியதரிசி) தோழர் P. P. அருணுசலம் (இணைக்காரியதரிசி) ஆகியோரும் செங்கொடிசங்கத்தின்முன்னேற்றத்தைப் பற்றியும் அது மக்களுக்கு செய்து வரும் அரிய தொண்டுகளையும் பற்றிப் பேசினுர்கள்.

இறுதியில் கீழ் கண்ட பெயர்களைக் கொண்ட தோட்டக் கமிட்டி தெரிவு செய்யப்பட்டது.

தலைவர்: K. மாரிமுத்து, உப தலைவர்: P. ரெங்கையா, காரியதரிசி: M. G. இராமசாமி, உப காரியதரிசி; P. D. நடேசன், பொருளாளர்: உடையான், உபபொருளாளர்: P. மூக்கையா

மற்றும் 9 பேர்களைக்கொண்ட கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது.

### பீடித்தொழிலாளர்கள் மாநாட்டிற்கு தயாராகிருர்கள்

கொழும்பு மாவட்ட பீடித் தொழிலாளர்களின் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. விரைவில் தங்களுடைய ஐக்கிய பீடித் தொழிலாளர் சங்கத்தின் மாநாட்டை நடத்துவதெனஅக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் ஐக்கிய பீடித் தொழிலாளர் சங்க பொதுச் செயலாளர் தோழர் ரி. டபிள்யூ. பெரேரா அவர்கள் பேசினுர். அப்பொழுது அவர் கடந்தகாலத்தில் எமது சங்கம் நடத்திய போராட்டத்தின் மூலம் சம்பள நிர்ணய சபை போன்றவற்றை பீடித் தொழிலாளர்களுக்குபெற்றுக்கொடுத்ததென்றும், எதிர்காலத்தில் தமிழ்நாட்டில் உள்ளதுபோன்றதொழிற்சாலை முறை இந்த நாட்டிலும் அமுல் படுத்தப்பட

வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து எமது சங்கம் போராட இருப்பதாகவும் குறிப்பிட்டார். ஆகவே இப் போராட்டத்திற்கு பீடித் தொழிலாளர்களை அணிதிரட்டும் முக்கிய கடமையை எதிர் வரும் பீடித்தொழிலாளர் மாநாடு நிறைவேற்றும் என்றும், இம்மாநாட்டை சிறப்புற நடத்த சகல பீடித் தொழிலாளர்களும் பெரிதும் உற்சாகத்துடன் செயலாற்ற வேண்டுமெனவும் குறிப்பிட்டார்,

எதிர்வரும் மாநாட்டைநல்ல முறையில் நடத்துவதென்றும் அதற்கு ஏற்படக்கூடிய செலவிற்கு ஈடு செய்யும் முறையில் ஒவ்வொரு தொழிலாளர்களும் ஒருநாள் சம்பளத்தை மாநாட்டு நிதிக்காக வழங்குவதெனவும் கூட்டத்தில் தீரமானிக்கப்பட்டது.

அண்மையில் சோவியத் நாட்டிலிருந்து திரும்பிய தோழர் எம். எம். சாபி அவர்களுக்கும் கூட்டத்தில் வரவேற்பளிக்கப் பட்டது.

#### மாநாட்டிற்கு நிதி வழங்கினர்

பீடித் தொழிலாளர்கள் தங்கள் எதிர்வரும் மாநாட்டுச் செலவிற்கு ஒருநாள் சம்பளத்தை நிதியுதவியாக வழங்குவதென்ற தீர்மானத்திற்கிசைய உடனடியாக பல கிளைகள் நிதி வழங்கியுள்ளன.

கொழும்பு ஜெம்பட்டா வீதியிலுள்ள ராஜா பீடி கம்பெனித் தொழிலாளர்கள் ரூபா 498-41 சதமும், கொயில் வத்தை பீடித்தொழிலாளர்கள் ரூபா 400/- வழங்கியுள்ளனர்.

# மக்கள் சீனத்தின் மாபெரும் வளர்ச்சி . . .

## சிறந்தகொள்கையும் சீரிய தலைமையும் அளித்த பரிசு

கடந்த பல கடிதங்களில் பல்வேறு முக்கியத்துவம் பெற்றுள்ள சர்வதேசிய விவகாரங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். மீண்டும் இக்கடிதத்தில் உலகத்தில் நடைபெற்று வரும் பேச்சு வார்த்தைகளைப் பற்றியோ, தகராறுகளைப் பற்றியோ குறிப்பிட விரும்பவில்லை. அதற்குப் பதிலாக இக்கடிதத்தில் நிரந்தரமான முக்கியத்துவம் பெற்று வளர்ந்து வரும் சீனத்தைப் பற்றி, கடந்த 5 வருடத்தில் அது அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

சென்ற சில மாதங்களாக நேரடியாகவும், பீக்கிங்கிலுள்ள (சீனத்தின் தலைநகர்) நண்பர்கள் வாயிலாகவும், கிராமப்புரங்களிலிருந்தும் பல புள்ளி விவரங்களைச் சேகரித்தேன். அதன் பயனாக கீழ் காணும் முடிவை என்னால்பெற முடிந்தது. பொருளாதார ரீதியில் நல்ல முன்னேற்றமும், நகரத்திலும் கிராமப் புறங்களிலும் அதிகமான உணவுத் தானியங்களும், குறைந்த விலையில், சிறந்த, அதிகமான தேவைப் பொருட்களும், கிராம அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தையும் காணமுடிந்தது.

உருக்கு உற்பத்தி போன்ற பெரும் கைத்தொழில்கள் பற்றி அதிகமாக ஒன்றும் கேள்விப்படவில்லை. ஆனால் 10,000க்கு அதிகமான புதிய டிராக்டர்கள், அதாவது 1957ல் இருந்ததைவிட நான்கு பங்கும், லட்சக் கணக்கான நீர் பாச்சும் யந்திரங்களும், அதாவது 1957ல் இருந்ததை விட 20 மடங்கும் கூடியுள்ளதெனில் அவை வெறும் காற்றிலேயிருந்து உற்பத்தி செய்யப் பட்டவையல்ல. இவ்வித யந்திரங்களெல்லாம் உள்நாட்டில் உள்ள யந்திர ஆலைகளிலேயே உருவாக்கப்படுகின்றன.

### உறுதியடைந்துள்ளது

இதுபற்றி ஒரு நெருங்கிய நண்பரல்லாத வெளிநாட்டு தூதுவர் ஒருவர் கூறியது நினைவுகொள்ளத்தக்கது. சீனு தான் சோஸலிஸ்ட் நாடுகளுக்குள் முதன்முதலில் விவசாயப் பிரச்சினையைத் தீர்க்கும் என அவர் முடிவு செய்துள்ளார். ஆனால் அதே மனிதர் இரண்டு வருடங்களுக்கு முன் பண்ணைகளுக்கு பெருங்கேடு நடந்து விட்டதாக எண்ணினர். கியூபன் எழுத்தாளர் ஒருவர் கூட்டு பொருளாதாரம் தனது பரீட்சையில் வெற்றி பெற்றுவிட்டது; கம்யூன் முன்பிருந்ததிலும் கூடுதலாக உறுதியடைந்துள்ளது, எனக்குறிப்பிட்டுள்ளார்.

இந்த வருட கோடைக் காலத்தில் சீனுவின் பொருளாதாரம் திடமாக முன்னேறுகிறது. முன்னெப்பொழுதும் வாழ்ந்ததிலும் பார்க்க சிறந்த வாழ்க்கையை சீன மக்கள் எதிர் நோக்கக்கூடிய நல்ல நிலை தோன்றியுள்ளது. இவ்விதமான நல்ல திடமான பொருளாதாரம் தோன்றி உள்ளதற்கு இயற்கையின் உதவி மட்டும் காரணமல்ல. வெளிநாட்டு "உதவி"களுமல்ல. பதிலாக தன்னம்பிக்கை கொண்ட சீன மக்களின் அயராத உழைப்பும், அவர்களது தலைவர்களின் திடமான கொள்கைகளுமாகும். கஷ்டமான வருடங்களை சீனு சமாளித்தமுறை பல ஆசிய பொருளாதார நிபுணர்களைக் கவர்ந்துள்ளது. மூன்று வருடமாக மோசமான விளைச்சலை நீங்கள் பெற்றீர்கள். ஆனால் ஒரு டாலருக்காவது நீங்கள் இரக்கவில்லை. இப்பொழுது உங்களுடைய சக்தியிலேயே நீங்கள் முன்னேறுகிறீர்கள். வேறு எந்த நாட்டால் அதைச் செய்ய முடியும் என அவர்கள் வியக்கின்றனர்.

### பெரிய பாச்சல்

சீனு 1958க்கு முன்பதாக சிறிது முன்னேறியது, ஆனால் "பெரிய பாச்சலும்" கம்யூனும் பல குறைபாடுகளைத் தவிர வேறு எதையும் அளிக்கவில்லை என்று வெளியே பேசுவது ஓர் நாகரீகமாகிவிட்டது. 1958ல் பெரிய பாச்சலை நான் கண்டதிலிருந்து ஆரம்பிக்கிறேன். ஓர் விளம்பரம் ஒட்டப்பட்டது. அதில் மனித சக்தி, கூட்டு உழைப்பினால், புதிய உலகத்தை உருவாக்குவது என்ற கருத்து இருந்தது.



உற்சாகமாகக் காணப்படும் இக்கன்னியர்கள் சின்குடி பகுதியிலுள்ள வின்குவான் கம்யூனைச் சேர்ந்தவர்கள். இவர்கள் வயல் வேலை செய்வதற்காக, வெள்ளம் நிறைந்த இப்பகுதியில் அதிகமாகப் பாவிக்கப்படும் படகு ஒன்றில் சென்றுகொண்டிருக்கின்றனர்.

அரை வருடத்திற்குள் 10க் கோடி மக்கள் 26,000 கம்யூன்களில் திரண்டனர். அந்தவருட அறுவடை உண்மையிலேயே மிகப் பெரியதாகும். சில கம்யூன்கள் அறுவடைப் பொருட்களை சந்தைக்கு அனுப்புவதற்காக புகையிரதப் பாதைகளை அமைத்தார்கள். சிலர் வயலிலேயே விட்டுவிட்டு உருக்கு உற்பத்தி செய்யச் சென்றார்கள். உள்நாட்டில் இயங்கும் ஆலைகளில் 6 கோடி மக்கள் இலையுதிர் காலத்தில் வேலை செய்தார்கள். ஹொனன் மாகாணத்தில் ஒரு பெரிய சாதனையே நிலைநாட்டப்பட்டது. முழு ஐக்கிய அமெரிக்காவும் ஒரு நாளில் உற்பத்தி செய்யும் உருக்கைவிட கூடுதலாக ஹொனன் மாகணத்தில் ஒரு நாளைக்கு உருக்கு உற்பத்தி செய்யப்பட்டது. பனிக்காலத்தில் 7½ கோடி மக்கள் நீர்த் தேக்கங்களையும், நீர்ப்பாசன வசதிகளையும் அமைக்கச் சென்ருர்கள்.

சீனத்திலுள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் தற்பொழுது இரும்பு, உருக்கு உற்பத்தி செய்யத் தெரியும். ஒவ்வொரு நகரமும் தனக்குத் தேவையான உற்பத்தியை வளர்த்து வருகிறது. பெரிய பாச்சலின் மகத்துவம் இது தான்.

பெரிய பாச்சல் தற்காலிகமாக இயற்கை விளைவித்த அழிவினால் தடைப்பட்டது. ஆனால் மூன்று வருடங்களில் உருக்கு உற்பத்தி 3 பங்கு கூடியது. பொதுக்கைத்தொழில் உற்பத்தியில் ஐந்தாண்டுத் திட்டம் இரண்டு வருடத்தில் நிறைவேற்றப்பட்டது. ஆனால் 1960ல் ஏற்பட்ட கடும் வரட்சியும், பெரு வெள்ளமும் 60 வீத சீன, விளைச்சல் நிலத்தைப் பாதித்தது. பண்ணைகளினால், வளர்ந்துள்ள கைத்தொழிலுக்கு, தொழிலாளர்களுக்கு உணவை, யந்திரங்களுக்குரிய பிற சாதனங்களை அளிக்க முடியாதிருந்ததே. தானியம் முக்கிய தேவையாயிற்று.

கடந்த வருடம் இலையுதிர் காலம் வரை இதனால் ஏற்பட்ட நஷ்டம் இருந்து வந்தது. ஆனால் கைத்தொழில் உற்பத்தி மலையெனப் பெருகிற்று. 1960ல் சில வெளிநாட்டு நிபுணர்கள் திருப்பி அந்நாடுகளுக்கு அழைக்கப்பட்டனர். இதனால் முழு உற்பத்தி சாதனங்களும், முக்கியமாக பெரும் உற்பத்திச்சாலைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டன. விவசாயத்தையும் இது சிறிது பாதித்தது,

கம்யூன் அமைப்பும், கைத்தொழிலுக்கும் விவசாயத்திற்குமிடையில் நெருங்கிய தொடர்பு போன்ற கொள்கையும்தான் துன்பகரமானவருடங்களிலிருந்து சீனத்தைப் பாதுகாத்தது. வெளிநாடுகளில் சிலர் கூறியது போல மக்கள் கம்யூன் அடிமை முறையுமல்ல, மாருக சில அன்பர்கள் எண்ணியது போன்று, ஒரே முறையில் கம்யூனிஸத்தை அடையும் மாயவித்தையுமல்ல. அவ்விதம் சீன கம்யூனிஸ்டுகள் என்றும் எண்ணியதும் கிடையாது. பதிலாக தேவையான யந்திரமயமாக்குதலுக்கு, நீர்ப்பாசனத்திற்கு, உள்நாட்டு கைத்தொழிலுக்கு பெரிதும் உதவும் ஓர் சிறந்த சமூக அமைப்பாக கம்யூன் அமைந்தது. அத்தோடு அவை குறிப்பிட்ட பகுதிகளுக்கு அரசாங்கமாக விளங்கின. அவ்வப்பகுதிகளுக்கு தெருக்கள், நீர்ப்பாசனம், மருத்துவமனை, பாடசாலைகள், சிறுகைத்தொழில் போன்ற பலவகையான உழைப்புவளங்களைப் பயன் படுத்தும்சக்தியாகவிளங்கியது.

இயற்கையால் நாசம் விளைவிக்கப்பட்ட 3 வருடங்களில் கம்யூன்கள் மக்களுக்குப் பெரிதும் உதவியாக இருந்தது. முதலில் ஏற்பட்ட வரட்சியையும், வெள்ளத்தையும் சமாளிக்கக் கூடியதாக அவர்கள் கட்டிய நீர்த்தேக்கங்கள் விளங்கின. இது பற்றுமல் போன காலத்தில் தம் சுய உழைப்பினாலும், சமத்துவமான முறையிலும் அண்மையிலிருந்த பகுதிகளோடும் உதவி பரிமாறல் செய்து கொண்டன.


சில கிராமங்களில் அரசாங்க உதவிபெறவேண்டிய அளவுக்கு நிலைமை மோசமான பொழுது அப்பகுதிகளுக்கு உதவி செய்ய கம்யூன்கள் முன் வந்தன. முன்பு வறுமை ஏற்படின், பணக்காரர்கள் சகல தானியங்களையும் வாங்கினார்கள். வறியவர்கள் வீடுகளை விட்டு வெளியேறி, பிச்சை எடுத்து தமது பிள்ளைகளை பிறருக்கு விற்று வருந்தினார்கள். ஆனால் கடந்த கஷ்டமான வருடங்களில் சகலரும் ஒன்றுபட்டு, ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து, பட்டினியிலிருந்து பாதுகாத்து, முன்பிலும் ஐக்கியப்பட்டு எல்லோரும் சமமான வாழக்கை நடத்தினர்.

### நெருங்கிய பிணைப்பு

கம்யூன்கள் சிறிதாக்கப்பட்டன. 5,000 குடும்பங்களைக் கொண்ட 26,000 கம்யூன்கள் 1962ன் முடிவில் 18,000 குடும்பங்களைக்கொண்ட 74,7000 கம்யூன்களாகப் பிரிக்கப்பட்டன: ஒவ்வொரு கம்யூனும் 9 பிரிகேட்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவை பண்ணை உற்பத்திப் பகுதிகளாகும். கம்யூன்கள் ஏனைய பிரச்சனைகளாகிய வீதிகள் அமைத்தல், நீர்ப்பாசனம், சிறு கைத்தொழில் போன்ற முக்கிய தேவைகளை இவை பூர்த்திசெய்து வந்தன.

கஷ்டமான வருடங்களில் சீனுவைக் காப்பாற்றிய இரண்டாவது அம்சம், விவசாயத்திற்கும், கைத்தொழிலுக்கும் இடையிலிருந்த நெருங்கிய தொடர்பாகும். "விவசாயம் அடித்தளம் கைத்தொழில் முக்கிய அம்சம்" என்ற கோட்பாடு சீனவில் கடைபிடிக்கப் படுகிறது. விவசாயத்திற்கு வேண்டிய டிராக்டர், நீர்பாச்சு யந்திரங்கள், அணுசக்தி போன்

(6-ம் பக்கம் பார்க்க)



மஞ்சள் நதியிலிருந்து உயரமான பகுதிகளுக்கு நீர் பாச்சும் கசினேவன் நீர்பாச்சு நிலயத்தைப் படத்தில் காணலாம்.

# மீண்டும் போராட உறுதி பூண்டனர்

## மோட்டோர் தொழிலாளர்களின் மா நாடு வெற்றிகரமாக நடந்தேறியது

இலங்கை மோட்டோர் தொழிலாளர் சங்கத்தின் 16வது மாநாடு வெகு சிறப்பாக கடந்தமாதம் நடந்தேறியது. இரண்டு நாட்களாக கொழும்பிலுள்ள செஞ்சிலுவை மண்டபத்தில் நடைபெற்ற இம்மாநாட்டிற்கு இலங்கையின் சகல பகுதிகளிலிருந்தும் 500க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் வந்திருந்தனர். சோவியத் நாட்டிலிருந்தும், மக்கள் சீனத்திலிருந்தும் சகோதரப் பிரதிநிதிகள் இம்மாநாட்டிற்கு வருகைதந்தனர். அது மட்டுமல்லாமல் இந்த நாட்டிலுள்ள ஏனைய இடதுசாரி தொழிற்சங்க பிரதிநிதிகளும் இம்மாநாட்டில் கலந்துகொண்டு, மாநாடு வெற்றிபெற தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்

மாநாட்டினை இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் தலைவர் தோழர் எம். ஜீ. மெண்டிஸ் திறந்து வைத்தார். அப்பொழுது அவர் இலங்கை மோட்டோர் தொழிலாளர்களின் வாழ்க்கையில், முக்கியமாக இ. போ. ச. தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் இம்மாநாடு மிக முக்கியத்துவம் வாய்த்தது எனவும் இன்றைய எமது தாய் நாட்டின் அரசியல் நிலைமையில் தொழிலாளர்கள் ஆற்றவேண்டிய கடமையையும் விளக்கினர்.

அதைத் தொடர்ந்து சங்கப் பொதுக்காரியதரிசி தோழர் என். சண்முகதாசன் தமது அறிக்கையை சமர்ப்பித்தார். அவ்வறிக்கையில், கடந்த காலத்தில் மோட்டார் தொழிலாளர்கள், குறிப்பாக இ.போ. ச. தொழிலாளர்கள் நடத்திய வீரமிக்க போராட்டத்தையும், அதை முறியடிக்க அரசாங்கமும், இ.போ.ச. பிற்போக்குத் தலைமையும் கையாண்ட நீசத்தனமான போக்கையும் விளக்கினர். மேலும் தமது அறிக்கையில் அரசாங்கத்தின் தொழிலாள விரோதப் போக்கினை மாற்ற தொழிலாளர்கள் ஒன்றுபட வேண்டும் எனவும், ஒற்றுமையின் மூலம் நிச்சயமாக வெற்றிபெற முடியும் எனவும் குறிப்பிட்டார்.

அறிக்கையையொட்டி நடந்த விவாதத்தில் நூற்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கு கொண்டனர். இவ்விவாதத்தின் பின் மக்கள் சீனத்திலிருந்து வந்திருந்த சகோதரப் பிரதிநிதி தோழர் சீயா ஓ குன்சி, மகாநாட்டிற்கு மக்கள் சீன தொழிலாளர்களின் சார்பில் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். அவர் தமது உரையில் இலங்கைக்கும் சீனவுக்கும் பொதுவான பல கடமைகள் உண்டு என்றும், எமது இரு நாடுகளுக்கும் எதிரியாக விளங்கும் ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டத்தில் நம் இரு நாடுகளும் ஒன்றுசேர்ந்து போராடுவதின் மூலம் மேலும் எமது ஐக்கியம் வளரும் எனவும் குறிப்பிட்டார். அத்தோடு இலங்கைத் தொழிலாளர்களினதும், பொதுமக்களினதும் போராட்டங்களை மக்கள் சீனத் தொழிலாளர்கள் பெரு மதிப்புடன் உற்று நோக்குவதாகவும், அதற்கு தம்முடைய ஆசியும் ஆதரவும் என்றும் உண்டு என்றும் குறிப்பிட்டார். அவர் பேசிய பொழுது குழுமியிருந்த பிரதிநிதிகள் உற்சாகப் பெருக்கினால் பல தடவைகளில் கரகோஷம் செய்தனர்.

எம். ஈ. பி. தொழிற்சங்கமான சமஸ்த லங்கா மோட்டோர் சேவக சங்கத்தின் சார்பில் மாநாட்டில் கலந்துகொண்ட தோழர் ரூபட் குணவர்தன தமது வாழ்த்துக்களை மாநாட்டிற்குத் தெரிவித்தார். ''அத்தோடு இன்று ஏற்பட்டுள்ள இடதுசாரிகளின் ஐக்கியம் தொழிலாளர்களுக்கு ஓர் புதிய நம்பிக்கையை அளித்துள்ளதென்றும், அவர்களை சரியான தலைமைகொடுத்து, முன்னெடுத்துச் செல்லவேண்டியது ஐக்கிய முன்னணியின் கடமை'' என அவர் தம்து பேச்சின்போது குறிப்பிட்டார். முதல் நாள் மாநாட்டு நிகழ்ச்சிகள் மக்கள் சீன வாழ்க்கையைச் சித்தரிக்கும்சிறந்த படக்காட்சியுடன் முடிவுற்றது.

இரண்டாவது நாள் நிகழ்ச்சி பொதுக்காரியதரிசி அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானங்களையொட்டிய விவாதத்தோடு ஆரம்பமாகியது. இவ்விவாதத்திலும் பல பிரதிநிதிகள் கலந்துகொண்டு பேசினர். இறுதியில் தீர்மானங்கள் யாவும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. அதன்பின்பு சமசமாஜக் கட்சியின் ஐக்கிய மோட்டோர் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் பேசிய தோழர் எஸ். ஏ. மாட்டினஸ் அவர்கள் மாநாட்டிற்கு தமது சங்கத்தின் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

அவர் பேசுகையில், ''இடதுசாரி ஐக்கிய முன்னணியை தொழிலாளர்கள் பெரிதும் வரவேற்கிறார்கள். ஆனால் முதலாளித்துவ அமைப்பின் கீழேயே சோஷலிஸம் பெற்றுவிடலாம் என்றோ அல்லது முதலாளித்துவ நிர்வாக யந்திரத்தையே சோஷலிஸம் அமைக்க உபயோகிக்கலாம் என்பதோ பைத்தியகாரத்தனம்'' எனக் கூறி ''இடதுசாரிக்கட்சிகள்பாராளுமன்றத்தின் மூலம் ஆட்சியைக் கைப்பற்ற முனைகின்ற அதே நேரத்தில் பிற்போக்குவாதிகளின் எதிர்தாக்குதலை முறியடிக்க எந்தவித போராட்டத்திற்கும் தயாராக இருக்கவேண்டும் எனக் குறிப்பிட்டார்.''

பிரயாண வசதியீனத்தால் மாநாட்டிற்கு குறிப்பிட்ட நேரத்திற்கு வரமுடியாமல் போன சோவியத் நாட்டு தொழிற்சங்க பிரதிநிதி தோழர் ரேமனேவ் இரண்டாம் நாள் முடிவில் மாநாட்டில் கலந்துகொண்டு தமது நாட்டுத் தொழிலாளர்களின் சார்பில் மாநாட்டை வாழ்த்தினர். மலர்மாலைகள் சூட்டி, பெருத்த குதூகலத்துடன் அவரும் வரவேற்கப்பட்டார்.

மாநாட்டில் கீழ்காண்போர் நடப்புவருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:
**தோழர் எம்.ஜி. மெண்டிஸ்**

உப-தலைவர்கள்:
ஏ. வீ. பீரிஸ்
கே. ஈடின் சில்வா
போதிக் கொட்டுவ
சுசிமா டி சில்வா
ஹென்றிக் சிங்கோ
கிக்கொட தர்மசேன
கே. வீ. கிருஷ்ணக்குட்டி

பொதுச்செயலாளர்:
**என். சண்முகதாசன்**

உப-செயலாளர்:
சமால் தி சில்வா
ஜி.டபிள்யூ.எஸ். த சில்வா
ஏ. சீபட் சில்வா

தனாதிகாரி:
**டேவிட் வித்தியாபத்திரன**

அமைப்புச் செயலாளர்:
**தம்மிக்க குணதாச**

நிர்வாகக் காரியதரிசி;
**டி. ஜி. குருகே**

## மக்கள் சீனத்தின். . . .

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

றவற்றை தேவைக்கு ஏற்ற முறையில், தேவையான வடிவத்தில் உற்பத்தி செய்வது கைத்தொழில். ஆனால் இதற்கு அடிப்படை விவசாயம். ஏனெனில் விவசாயம் சிறப்பாக நடைபெற்றால்தான் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு உணவு அளிக்க முடியும்.

விவசாயத்தை மேலும் தீவிரப்படுத்தக்கூடிய டிராக்டர், நீர்ப்பாச்சு யந்திரம் போன்றவற்றின் உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அவ்வித யந்திரங்கள் முக்கியமாக, தானிய உற்பத்தியைப் பெருக்கக்கூடிய இடங்களுக்கு அனுப்பப்பட்டன. லோயாங் டிரக்டர் நிலையம் 15,000 டிரக்டர்களை ஒரு வருடத்திற்கு உற்பத்தி செய்கிறது. இவை சைபீரியாவுக்கென சோவியத் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற டிராக்டர்களின் தன்மை பெற்றவை: அதனால் மஞ்சூரியாவிற்கும், வட சீனவிற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு உபயோகிக்கப்படுகின்றன. முன்பு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட டிராக்டர்களுக்குரிய உதிரிப் பாகங்களும் இவ்வாலையில் உற்பத்தி செய்யப் படுகின்றன. பீக்கிங், சங்காய், வூகான் போன்ற பல பகுதிகளிலும் டிராக்டர் உற்பத்தி நடைபெறுகிறது.

வடிகால் வசதிகளும், நீர்ப்பாசன வசதிகளும் தீவிரமாக முன்னேறியுள்ளன. 1957ல் இருந்ததைவிட இதற்குத் தேவையான தளவாட உற்பத்தி 10 வீதமும், மின்சார நீர்ப்பாச்சு நிலையங்கள் 20 வீதமும் அதிகரித்துள்ளன. 1963 ஏப்ரலில் வட ஹோயங்கில் பல நூற்றுக்கணக்கான நீர்ப்பாச்சு வாய்க்கால்கள் புதிதாக அமைக்கப்பட்டன.

விவசாயத்திற்கும் கைத்தொழிலுக்கும் இடையிலுள்ள இந்த ஒற்றுமை பொருளாதாரத்தை நன்கு வளர்த்து வருகிறது. பண்ணைகளின் தேவைகளை அறிய தொழிற்சாலைகளிலிருந்து ஆய்வுக்குழுக்கள் செல்லுகின்றன. அவர்களின் கணிப்புக்கேற்ப உற்பத்தி நடைபெறுகிறது. அதற்கடுத்ததாக விவசாயிகளுக்கு வேண்டிய அவசிய பொருட்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அதேபோல் விஞ்ஞானத்திலும், வைத்திய துறை அபிவிருத்தியிலும் சீன சிறப்பாக முன்னேறி வருகிறது.

இன்று சீனவிற்குள்ள பிரச்சனை கஷ்டத்தை எப்படித் தாண்டுவது என்பதல்ல பதிலாக புதிய முன்னேற்றத்தைக் காண்பதாகும்.

## முன்னேற்றப் பாதையிலே மட்டுநகர் தொழிலாளர்கள்

### இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைமையில் பல வெற்றிகள்

மட்டக்களப்புப் பிரதேசத்தில் இன்றைய அரசியல் சூழ்நிலை ஒரு மாற்றத்திற்குட்பட்டு வளருகின்ற காலகட்டத்தில் இருக்கின்றது.

தமிழரசுக் கட்சியின் கையாலாகாத் தனத்தைக் கண்ட ஈழத்து தமிழர்கள், தாங்கள் கண் மூடித்தனமாகக் கையாண்ட வகுப்பு வாதத்தை விடுத்து முற்போக்கு சக்திகளின் முன்னணியில் அணிவகுக்கின்ற இந்தக் காலகட்டத்தில், மட்டக்களப்புப் பொது மக்களும் தொழிலாளர்களும் ஒன்றுதிரண்டு சோசலிசப்பாதையை நோக்கி வீர நடை போட ஆரம்பித்துள்ளனர். குறிப்பாகத் தொழிலாளர்கள் இ.தொ.ச.ச. ஸ்தாபன ரீதியாகச் சேர்ந்து தங்கள் உரிமைகளைப் பெறுவதற்குப் போராட்டம் நடத்தத் திடசங்கற்பம் பூண்டுள்ளனர்.

அண்மையில் சினிமாத் தொழிலாளர்கள் அனைவரும் மட்டக்களப்பு இ.தொ.ச.ச. கந்தோரில் கூடி பலம் வாய்ந்த ஒரு கமிட்டியைத் தெரிவு செய்து முதலாளிகளின் அடக்குமுறையையும், காரணமின்றித் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவதையும், மேலதிக வேலைக்குச் சம்பளம் கொடுக்காது தொழிலாளர்களைச் சுரண்டிக் கொழுக்கும் கொடுமையையும், இ.தொ.ச.ச.தின் தலைமையின் கீழ் எதிர்த்துப் போராடி, முறியடித்து வெற்றிகாண உறுதி பூண்டுள்ளனர்.

மட்டக்களப்பு தச்சுத் தொழிற்சாலையை மூட அரசாங்கம் எடுக்கும் மறைமுக முயற்சிகளை நாட்டு மக்களுக்கு அம்பலப்படுத்தியதுமல்லாமல், அந்தப்போக்கைத் தடுப்பதற்கு இ.தொ.ச.ச: பிரதிநிதி தோழர் கே.வி. கிருஷ்ணகுட்டி



29-7-63ல் தலைமைக காரியாலயத் தலைவர்களைக் கண்டு பேசியதுமல்லாமல், யாழ்ப்பாணம் பண்டாரவளை போன்ற தொழிற்சாலைகளையும் மூட எத்தனிக்கின்றார்கள் என்றும் அந்த நேரத்தில் தொழிலாளர்களின் ஐக்கிய போராட்டமொன்று நடத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

அதே நேரத்தில் பஸ் போக்குவரத்தின் சீர் கேடுகளையும் தொழிலாளர்களைப் பழிவாங்க நினைக்கும் இ. போ. ச. பிற்போக்குக் கும்பலையும் எதிர்த்துப் போராட மட்டக்களப்பு இ.போ.ச. தொழிலாளர்களும் பொது மக்களும் ஒன்றுதிரண்டு வருகின்றார்கள். கடந்த இ. போ.ச. வேலை நிறுத்தத்தின் போது பழி வாங்கும் எண்ணத்துடன் நாலு தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். அதற்கெதிராக எமது சங்கம் போராடி மீண்டும் வேலையையும், வேலை நீக்கப்பட்டிருந்த நாட்களுக்குரிய சம்பளத்தையும் பெற்றுக்கொடுத்துள்ளது.

தொழிலாளர்களுக்குச் சாதகமாக இருக்கின்ற சட்டங்களை முறியடிப்பதே தங்கள் பணி என்று கருதும் முதலாளிகளின் போக்கை எதிர்த்து தொழில் அதிகாரிகள் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டிய சூழ்நிலையில் மட்டக்களப்பு இருக்கின்றது.

சாப்புச் சட்டத்துக்கெதிராக மட்டக்களப்புக் கடைத்தெருவில் ஒரு கடை திறந்ததற்கு தொழில் அதிகாரிகள் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டி வந்தது. இதன் பலனாக மட்டக்களப்புச் சரித்திரத்திலேயே நடக்காத ஒரு வழக்கு நடக்கின்றது. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துக்கு ஆயிரக்கணக்கான ரூபாய்களைக் கொட்டி முதலாளிகள் வழக்காடவேண்டியிருக்கின்றது.

மட்டக்களப்புத் தொழிலாளரும் தொழிற்சங்கமும் எத்தகைய முன்னேற்றம் அடைந்துள்ளனர் என்பதை இது காட்டுகின்றது.

மட்டக்களப்புத் தொழிலாளர்கள் உணர்ச்சிமிக்கவர். புரட்சி யெண்ணம் கொண்டவர்கள். யூ. என். பி. யை எதிர்த்து வெற்றி கொண்டவர்கள். வகுப்புவாதத்தை எதிர்த்து பணிபுரிபவர்கள். தாங்கள் உலகத் தொழிலாளர்களின் ஓர் அம்சம் என்று நினைப்பவர்கள். ஆகவே அவர்களுக்கு வெற்றி உறுதி-அவர்கள் இறுதி லட்சியம் கம்யூனிஸம்!

# பாரதம் போகும் பாதை எது?

உலகுவாழ் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டங்களைக் கவனிக்கிறோம். ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். பல நாடுகளில் அன்னிய முதலாளித்துவ பேய்களின் கொடிய சுரண்டலைப் பார்க்கிறோம். அதற்கெதிராக அந்த நாட்டு மக்கள் நடத்தும் கிளர்ச்சியை அறிகிறோம். அமெரிக்க ஏகாதிபத்திய யுத்த வெறியர்கள் வியட்நாமிலும், லாவோசிலும் நடத்தும் கொடிய மிருகத்தனமான தாக்குதல் பற்றி தினமும் வாசிக்கிறோம். அக் கும்பலின் அடக்குமுறைக்கு எதிராக வீராவேசம் மிக்க போராட்டத்தை அந்த நாட்டு மக்கள் நடத்துவதை நாள்தோறும் தெரிந்துகொள்கிறோம்.

உண்மையில் சர்வ தேசிய அரங்கில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும், மாற்றத்தையும், வளர்ச்சியையும் இலங்கையில் வாழுகின்ற தொழிலாளிவர்க்கமும், முற்போக்கு சக்திகளும், பொது மக்களும் கூர்மையாக உற்று நோக்கி வருகின்றனர். அதே வித மக்களுக்கு அண்மையும், அயல்நாடுமாகிய இந்தியாவில் நடக்கின்ற நிகழ்ச்சிகள் பற்றி அறிய ஆவல் பிறப்பது ஆச்சரியத்திற்குரியதல்ல.

வர்க்கமும் பிற்போக்குவாதிகளாக மாறி விடவில்லை. தமது வீரமிக்க போராட்ட உணர்ச்சிகளை, வரலாறுகளை மறக்கவில்லை. இதிலும் மேலாக தமது வாழ்க்கை நிலைமையை வர்க்க, முரண்பாட்டை மறந்துவிடவில்லை. அப்படியானுல் ஏன் இந்த நிலைமை.

நாட்டிலே பஞ்சமும் பசியும் வறுமையும் பிணியும் கூடுகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கிறது. அதற்கு மேலாக உயர்ந்து வரும் வாழ்க்கை செலவினுல் மக்கள் பெரிதும் கஷ்டப்படுகிறுர்கள். பல காரணங்களைக்காட்டி பொதுமக்கள் மேல் அரசாங்கம் வரிச்சுமையைத் திணித்துள்ளது. தொழிலாளர்களின் சம்பளத்திலே வெட்டு விழுகிறது. இவ்விதம் தொழிலாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் சுமையினைக் கூட்டி வரும் அரசாங்கம் மறுபுறத்தில் அந்தநாட்டு முதலாளி வர்க்கத்திடம் கொண்டுள்ள, கடைப்பிடிக்கும் கொள்கை என்ன ?

பதுக்கல் பேர்வழிகளும், மாஜி ஜமீன்தார்களும், மிட்டா மிராசுதார்களும் பத்திரமாகப் பாதுகாக்கப்படுகின்றனர். டாட்டாவும், டால்மிமாவும், சிதம்பரம் செட்டியாரும், எஸ்

வேண்டும் என்பதற்காக நேரடியாகவே இனவெறியை தூண்டும் வகையில் காங்கிரஸ்ஆட்சி செயல்படுகிறது. அண்மையில் நடந்த உப தேர்தலின்போது பல இடங்களில் இதைப் பார்க்க முடிந்தது.

இந்திய நாட்டில் இப்பொழுது 8 மாதங்களாக அவசர கால நிலமை ஆட்சியினரால் ஏற்படுத்தப் பட்டுள்ளது. அன்று ஏற்பட்ட எல்லைத் தகராறின் காரணமாக பிரகடன்ப் படுத்தப்பட்ட அவசர நிலமை இன்னும் நீடிக்கப்படுகிறது. அதன் மூலம் பல தேசிய தலைவர்களை கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய தலைவர்களை சிறையிலடைத்து காங்கிரஸ் ஆட்சி சித்திரவதை செய்கிறது.

இன்று சிறையில் வாடும் தலைவர்கள் யாவரும் அப்பழுக்கற்ற தேசபக்தர்கள் என்பதை காங்கிரஸ் ஆட்சியே ஏற்றுக்கொள்கிறது அவசரகாலத்தில் ஒரேமுகமாக தங்கள் கட்சி எடுத்த தீர்மானத்திற்கிடையே நடந்தவர்கள் என்பதையும் நாடறியும். இந்திய அரசு ஏற்படுத்திய தேசியப் பாது

கின்றனர் என்ற பேச்சும் அடிபடுகிறது.

எது உண்மை என்ற பிரச்சினை இருந்தபோதிலும் ஒன்று மட்டும் உண்மையென தெரிகிறது. தலைவர்களை சிறையிலடைத்து ஆட்சிக்கெதிரான பிரச்சாரங்களை தடுத்துவிட, மக்கள் இயக்கங்களை மலர விடாமல் தடுத்துவிட காங்கிர[illegible] ஆட்சி இவ்விதம் செயல்பட்டு வருகிறது.

உள்நாட்டில் மட்டுமல்லாது இந்திய அரசின்போக்கு வெளிநாட்டுக் கொள்கையிலும் மாறுதல் பெற்றுள்ளது. அண்மைக்காலங்களில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடனும், ஏனைய உலக ஏகாதிபத்தியத்துடனும் இந்தியா நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. அந்நாட்டின் ஆயுதங்களை உதவியின் பெயரில் தமது நாட்டில் கொண்டுவந்து குவிக்கிறது. அன்னிய ஏகாதிபத்தியப் படைகள் தமது நாட்டிலேயே நடமாட காங்கிரஸ் ஆட்சி இடம் கொடுத்துள்ளது. ''அமெரிக்க குரல்'' போன்ற அமெரிக்கப் பிரசாரங்களுக்கு தங்கு தடையின்றி நாட்டிலே இடம் கொடுத்துள்ளது. மொத்தத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நவீன காலனி ஆதிக்கம் இந்தியாவில் நாளுக்கு நாள் பலம் பெற்று வருகிறது.

அத்தோடு மட்டுமின்றி பஞ்சசீலத்தைப் பற்றி, நடுநிலைக் கொள்கையைப் பற்றியெல்லாம் உலகுக்கு பறைசாற்றிய உத்தமர் நேரு இன்று இது பற்றி எதுவும் பேசாது வாய் மூடி மௌனியாகிவிட்டார். அதற்குப் பதிலாக தனது நாட்டிலே, ஆசியாவிலுள்ள சின்னஞ் சிறிய நாடுகளைப் பயமுறுத்தக்கூடிய முறையில் ராணுவத்தை அதிகரித்தும், யுத்த தளவாடங்களை பெருக்கியும் வருகிறுர். இப் போக்கினைக் கண்டு அஞ்சாமல், சிந்திக்காமல் இருக்க எவராலும் முடியாது. கியுபன் போராட்டத்தின் போது, அமெரிக்காவுக்கு சீனி கொடுத்து உதவ, அதிலும் தனது நாட்டிலே சீனி பற்ருக் குறை இருக்கின்ற அதே நேரத்தில் சுதந்திரம் காக்கப் போராடிய கியுபா மக்களுக்கு எதிராக மிகக் குறைந்த விலையில் சீனி இந்தியாவால் வழங்கப்பட்டது.

இவ்வித நிலைமைகளைக் கண்டு இந்திய தொழிலாளி வர்க்கமும் பொது மக்களும் வாளாயிருக்கவில்லை. தற்போது கூடியுள்ள விலை வாசி உயர்வையும், வரி உயர்வையும் எதிர்த்துப் போராட அந்நாட்டு தொழிலாளி வர்க்கம் தயாராகிக் கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் காங்கிரஸ் ஆட்சியின் கீழ் படுகின்ற துன்


## பஞ்ச சீலம் காற்றில் பறக்கிறது

அதிலும் கடந்த வருடக் கடைசியில் நடைப்பெற்ற இந்திய சீன எல்லைச் சண்டைக்குப் பின் இந்தியா ஈழத்து மக்களின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்துள்ளது.

தற்பொழுது இந்திய நாட்டிலே ஆட்சிபுரிகின்ற காங்கிரஸ் அரசாங்கம் அண்மையில் நடைபெற்ற பல உப தேர்தல்களில் தோல்வி கண்டுள்ளது. ஆட்சியினர்களின் அதிகாரம் பாவிக்கப்பட்டும், மந்திரிகள், தலைவர்களின் சூருவளிச் சுற்றுப்பயணங்கள் நடத்தப்பட்டும், முற்போக்கு சக்திகள் பல காங்கிரஸை ஆதரிக்க முன்வந்தும் காங்கிரஸ் தோல்வியுற்று, பிற்போக்கு வெற்றி பெற்றதென்ருல் இதன் கருத்தென்ன?

வி. சுந்தரமும் சுகமான வழியில் தமது செல்வத்தைப் பெருக்குகின்றனர். ஏழைப் பொதுமக்களிடமிருந்து தேசப் பாதுகாப்பின் பெயரால் நேரு ஆட்சி சில்லரைத் தங்கத்தையுமே பறித்தெடுத்தது. அதே நேரத்தில் பல பெரிய மனிதர்கள், வெள்ளைக் குல்லாப்போட்டவர்கள் பதுக்கிவைத்த தங்கத்தின் தொகை கணக்கிடமுடியாது என இந்தியப் பத்திரிகைகளே கூறுகின்றன. அவர்களைப் பற்றியெல்லாம் நேருவின் காங்கிரஸ் ஆட்சி கவலைப்படவில்லை; தங்கத்தைக் கேட்டுப் பெறவுமில்லை.

பொருளாதார ரீதியில் மொத்தத்தில் ஏழைகள் ஏழைகளாக, மேலும் நாளுக்குநாள் எண்ணிக்கை கூடியவர்களாக



கரவைக் கந்தசாமி

காப்பு நிதிக்கு அள்ளிக் கொடுத்து, மக்கள் மன்றத்தில், பெருமளவில் சேர்த்துக் கொடுத்த ராமமூர்த்தியும், கே. டி. கே.யும், கல்யாண சுந்தரமும், சிந்தனும் உமாநாத்தும் நம்பியாகுர் போன்ற தலைவர்கள், அதிலும் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் சிறையிலடைக்கப் பட்டிருந்தார்கள்.

இதனைக் காணும் சிலரின் மனதிலே சிறு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அவசர நிலமை

## இனவெறி வளர்கிறது

அமெரிக்காவின் ''உதவி'' இந்தியாவில் நாளுக்கு நாள் கூடிவருகிறது. இது உண்மையில் பலவழிகளில் இந்திய அரசின் போக்கையே மாற்றி விட்டுள்ளது. அண்மையில் அமெரிக்காவில் சுற்றுப்பிரயாணம் செய்த இந்திய ஜனுதிபதி ஏகாதிபத்தியத்திற்கு எதிராக, காலனி சுரண்டலுக்கெதிராக ஒரு வார்த்தை கூட பேசவில்லை. அமெரிக்காவிலும், லத்தீன் அமெரிக்காவிலும், ஆபிரிக்காவிலும் நடைபெற்று வரும் நிறவெறியைக் கண்டித்தும் அவர் வாய் திறக்கவில்லை.

பத்திற்கு விடிவு காண சில அப்பாவிப் பொதுமக்கள் பிற்போக்குவாதிகளை நாடுகின்றனர்.

இவ்விதம் மக்கள் பிற்போக்குவாதிகளை நாடுகின்ற நிலைமை ஏற்படாதவாறும், காங்கிரஸ் ஆட்சியால் ஏற்பட்டுள்ள துன்பங்களை, துயரங்களை எதிர்த்து நடத்தும் போராட்டத்திற்கு தலைமை தாங்குவதும் அந்த நாட்டு முற்போக்கு சக்திகளின், தொழிலாளிவர்க்க தலைமையின் கடமையாகும்

### தென் கிழக்காசிய தோட்டத் தொழிலாளர் மாநாடு

இலங்கையில் தென் கிழக்காசிய நாடுகளில் உள்ள தோட்டத்தொழிலாளர் சங்கங்களின் மாநாடு ஒன்றை நடத்த இலங்கைத் தோட்டத் தொழிலாளர் (செங்கொடி) சங்கம் முயற்சி எடுத்துவருகிறது.

## அமெரிக்க ஆதிக்கம் வலுக்கிறது

நேருவின் ஆட்சி மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டதா ? அல்லது காங்கிரஸ் கட்சியின் கடைசிக்காலம் நெருங்கிவிட்டதா? இல்லையானுல் இந்தியப் பொதுமக்கள் சுரண்டல் கும்பலுக்கு, மத இன வெறியர்களுக்கு ஆதரவளிக்கும் அளவுக்கு பிற்போக்குவாதிகளாக மாறிவிட்டார்களா? அல்லது பிற்போக்குச் சக்திகள் ஆட்சியைக் கைப்பற்றும் அளவுக்கு முன்னேறிவிட்டார்களா? இக் கேள்விகள் இன்று யாவராலும் கேட்கப்படுகின்றன.

ஆனுல் ஒன்றுமட்டும் இதில் உண்மை என்பதை உறுதியாகக் கூறமுடியும். இந்தியப் பொதுமக்களும் தொழிலாளி

வளர்ந்துகொண்டு வருகிருர்கள். விவசாயிகள் நிலமற்றவர்களாய், நிலம்படைத்த பிரபுக்களின் நிரந்தர அடிமைகளாய், விமோசனம் காணுதவர்களாய் வாழ்கின்றனர். அதே நேரத்தில் நிலச் சீர்திருத்தம் என்ற பெயரில் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் மேலும் நிலம் படைத்தோருக்கு பாதுகாப்பு அளிக்கின்றனர்.

இதிலும் மேலாக தேசிய ஒற்றுமையைப் பாதுகாப்பவர்கள் என்று பறைசாற்றுகின்ற காங்கிரஸ் ஆட்சி இன, மத பேதங்களையும் நாட்டிலே தூண்டிவிட காரணமாகவிளங்குகிறது எந்த விதத்திலாயினும் தனது அதிகார பலத்தைக்காப்பாற்ற

யும், அன்னிய ஆக் ரமிப்பு என்ற இந்திய அரசின் ஓலமும் உண்மையில வேறு உள்கருத்தைக் கொண்டதா என பலர் கேட்கின்றனர். மக்களின் ஒப்பற்ற தலைவர்களை, தியாக சொரூபங்களை அடைத்துவைப்பதின் மூலம் நெருங்கிவரும் தமது முடிவை சிறிது தள்ளி வைக்கலாமெனக் காங்கிரஸ் கட்சி கருதுகிறது எனச் சிலர் சொல்லுகின்றனர். இவ்விதம் செய்வதின் மூலம் தனக்கு நேரடி எதிரியாகவிளங்கும் இந்தியாவிலேயே முதல் பெரிய எதிர்க்கட்சியாக விளங்கும் கம்யூனிஸ்ட் கட்சியை மேலும் வளரவிடாமல் தடுத்துவிடலாம் என்று நேரு பெருமகனும், அவரது சீடர்களும் கருது

## நிதி உதவி அளித்துவிட்டீர்களா?

வெள்ளவத்தை ஆலைத் தொழிலாளர்களின் போராட்டத்திற்கு உங்கள் எல்லோருடைய ஆதரவும் அவசியம் தேவை. உடனே உங்களாலியன்ற பொருளுதவியை, தனுதிகாரி, இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம், 123, யூனியன் பிளேஸ, கொழும்பு 2., என்ற விலாசத்துக்கு அனுப்பித் தரவும்.


### வாசித்துவிட்டீர்களா ?

இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர்
தோழர் எஸ். நடேசன்
எழுதிய

## இலங்கை-இந்திய பிரச்சினை

என்ற அரிய நூலை இன்றுவரை நீங்கள் வாசிக்கவில்லையானுல்
உடனே வாங்கிப் படியுங்கள்

கிடைக்குமிடம்:

சாந்தி நிலையம்,
20, கிங்ஸ் வீதி,
மாத்தளை.

# உறுதிமிக்க போராட்டம் வெற்றிகண்டது

## இங்கிரிய தோட்டத் தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்பினர்

இங்கிரிய தோட்டத் தொழிலாளர்கள் தமது பலகோரிக்கைகளுக்காகக் கடந்த மூன்றுமாதமாக வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தினுர்கள். அவர்கள் யாவரும் இலங்கைத் தோட்டத்தொழிலாளர் (செங்கொடி) சங்க அங்கத்தவர்கள். தொழிலாளர்கள் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளில் ஒரு சில கோரிக்கைகளையாவது வழங்க தோட்ட நிர்வாகம் மறுத்தது. இதன் காரணமாகவே இவ்வேலை நிறுத்தம் தொடங்கியது.

வேலை நிறுத்தம் செய்திருந்த மூன்று மாதங்களிலும் இங்கிரியா தோட்டத் தொழிலாளர்கள் பெருமளவு ஐக்கியத்துடனும் உறுதியுடனும் தமது போராட்டத்தை நடத்தினுர்கள். அதிலும் கூடுதலாக அப்பகுதி பொதுமக்கள் போராடும் தொழிலாளர்களுக்குப் பல விதமான உதவிகளை வழங்கினர். இதன் பயனுக தோட்ட நிர்வாகத்தின் அடம்பிடித்த போக்கு முறியடிக்கப்பட்டது.

இப் போராட்டத்தில் ஓர் சமாசம் ஏற்படுத்த தொழிற் கமிஷனர் பல முறை முயன்றும் தோல்வியே கிடைத்தது. அதற்குக் காரணம் தோட்ட நிர்வாகத்தினரின் முரண்டுப் போக்கேயாகும். இறுதியில் இத்தகராறு கைத்தொழில் நீதி மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இப் போராட்டத்தின் முக்கிய பிரச்சனைகளாக விளங்கிய ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு மாதாமாதம் அலவுன்ஸ் வழங்குவது, தோட்டப் பள்ளிக்கூடத்திற்கு ஒரு ஆசிரியரை நியமிப்பது, தற்காலிகத் தொழிலாளர்களை நிரந்தரமாக்குவது, கருப்பன் சந்தனப்பிச்சை ஆகியோரின் பிரச்சனை கைத்தொழில் நீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இதைத்தவிர 'புல்லுவெட்டும் தொழிலை இனிமேல் கட்டாயமானதாக தொழிலாளர்கள் மேல் திணிப்பதில்லை என தோட்ட நிர்வாகம் தொழிற் கத்தோரில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் போது ஏற்றுக் கொண்டது. இத் தொழிலாளர்கள் இவ்வாரம் மீண்டும் வேலைக்குத் திரும்பினர். வேலைக்குத் திரும்புவதற்கு முன்பாக நடத்திய பொதுக்கூட்டத்தில் தோழர் எம். ஜி, மெண்டிஸ், தர்மதாச ஜயக்கொடி, எஸ். நடேசன் ஹேமசந்திர மெண்டிஸ் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

## 62-ம் வருடம் சுத்த லாபம் 70 லட்சம்

பிரவுன் கம்பெனியில் 1962ம் வருட நிகர லாபம் 70 லட்சம் என கம்பெனி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தும் கூட, பிரவுன் கம்பெனித் தொழிலாளர்களின் நிலை இதுவரையும் மிகவும் பரிதாபத்துக்குரிய நிலையில் தான் இருந்துவருகிறதெனவும் அதற்குரியஒரேகாரணம்தொழிலாளர் ஸ்தாபனரீதியாக ஒன்று திரளாதிருக்கும் பலஹீனமேயாகும் என பிரவுண் கம்பெனித் தொழிலாளர்களின் கூட்டத்தில் ஐக்கிய இன்ஜினியர் தொழிலாளர் சங்கத்தின் பிரவுன் கிளைக் காரியதரிசி தோழர்குலதுங்கபேசும்பொழுது குறிப்பிட்டார்.

மேலும் கூறியதாவது: வருடக் கணக்காக கம்பெனி நிர்வாகிகளின் சுரண்டலுக்கு ஆளாகிய பிரவுன் கம்பெனித் தொழிலாளர்கள், கடந்தகாலங்களில் ஐக்கிய இன்ஜினியர் தொழிற் சங்கத்தில் சேர்ந்துபோராட முன் வந்தமையால் நிலமை ஓரளவு சீரடைந்து உள்ளது.

நாட்டிலுள்ள பல இன்ஜினியர் கம்பெனிகளில் பிரவுண் கம்பெனியே கூடுதலாக லாபமடைந்தும்கூட, அதில் கடமையாற்றும் தொழிலாளர்களின் நிலை மிகவும் கேவலமான நிலைக்கு ஆளாக வேண்டிய காரணம் நிர்வாகிகளது கவலையற்ற தன்மையைவிட அரசாங்கத்தின் தவருன போக்கேயாகும் எனக் கூறினுர்.

★★★★★★★★★★★

## பிரவுன் கம்பெனி டிரைவர்கள் சங்கத்தில் ஒன்று திரளுகின்றனர்

பிரவுன் கம்பெனியின் அதிகாரிகளது டிரைவர்கள் சகம் நம் ஐக்கிய இன்ஜினியர் சங்கத்தில் ஒன்று திரளுகின்றனர்.

1952க்கு முன் இவ் டிரைவர்கள் நேரடியாகவே கம்பெனி ஊழியர்களாகவே கடமையாற்றினர். ஆனுல் இப்பொழுது தனி நிர்வாகிகளினது தனிப்பட்ட டிரைவர்களாகவே நடத்தப்படுகின்றனர்.

கம்பெனிக்குச் சொந்தமான வாகனங்களைச் செலுத்தி கம்பெனியிலிருந்தே சம்பளங்களைப் பெறும் இவ் டிரைவர்களை, தனியாளுக்குச் சொந்தமான டிரைவர்களாக ஒதுக்குவதற்குக் காரணம் தொழிலாளர்கள் சட்டப் பிரகாரம் பெறவேண்டிய உரிமைகளை தட்டிக் கழிப்பதற்கேயாகும் என டிரைவர்கள் கருதுகின்றனர்,

இந்த அசாதரண நிலையை எதிர்த்துப் போராடி தங்களுடைய தொழிலை ஸ்திரமடையச் செய்யவும், தங்களது உரிமைகளை போராடி வெற்றியுறச்செய்யவும், இதற்குரிய ஒரேவழி பலம் வாய்ந்த தொழிற்சங்கச் சம்மேளனமான இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தில் சேர்ந்துபோராடுவதென டிரைவர்மார்களின் குழு ஒன்று (தொழிலாளி) நிருபரிடம் எடுத்துக் கூறியது.

# வெற்றி பெறும் வரை போராட்டம்

## வெள்ளவத்தை ஆலைத் தொழிலாளர்களின் முடிவு

கொழும்பிலே உள்ள மிகப் பெரிய, ஒரு நாளைக்கு இரண்டு முறை இயங்கும், 2500 தொழிலாளர்களுக்கு கூடுதலானவர்கள் வேலை செய்கின்ற ஆலை, கடந்த ஒரு மாதமாக அமைதியாக மூடிக்கிடக்கின்றது. அதிகாலையில் ஊதுகின்ற ஆலைச் சங்கு இப்பொழுது ஊதுவதில்லை. 25 கோரிக்கைகளுக்காக தொழிலாளர்கள் போராடுகிறுர்கள். ஒரு தொழிலாளி கூட வேலைக்குச் செல்வது கிடையாது. வேலை நிறுத்தம் பூரணமாக நடைபெறுகிறது.

பல நீண்ட போராட்டங்களை நடத்திய பெருமைமிக்க வரலாறு வெள்ளவத்தை ஆலைத் தொழிலாளர்களுக்கு உண்டு. ஆனுல் தற்போதைய வேலை நிறுத்தத்தைப் போல் நீதிமயமான, ஐக்கியமான போராட்டம் வேறெப்பொழுதும் நடைபெற்றதில்லை. எங்கள் கோரிக்கைகள் ஆலையில் நிலவிவரும் ஆகக் குறைந்த சம்பளத்தை மக்கள் உணர வைத்துள்ளது. எதற்காக அவர்கள் போராடுகிறுர்கள்? வேறு தொழிற்சாலைகளில் இல்லாத வேலை நிலையை நாம் கேட்கவில்லை. இலங்கை முதலாளிமார் சம்மேளனத்தின் கீழுள்ள ஸ்தாபனங்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் அதே அளவு சம்பளத்தை வழங்கும்படியே நாம் கேட்கிறுேம். வெள்ளவத்தை நெசவாலை நிர்வாகமும் இலங்கை முதலாளிமார் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கின்றது. இலங்கை முதலாளிகள் சம்மேளனத்திற்கும் இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்திற்குமிடையில் 1959ல் கூட்டு ஒப்பந்தம் ஒன்று கைெயழுத்திடப்பட்டது, அதன்படி 1959 மே மாதத்திலிருந்து அக்கூட்டு ஒப்பந்தத்திற்கு கீழுள்ள தொழிலாளர் அனுபவிக்கும் அதே சம்பளம், பஞ்சப்படி, விடுமுறை வசதிகளைத்தான் கேட்கிறுேம். கொழும்பிலுள்ள ஏனைய தொழிலாளர்களிலும் பார்க்க குறைந்த சம்பளத்தையே வெள்ளவத்தை ஆலைத் தொழிலாளர்கள் இன்றுவரை பெற்றுவந்துள்ளனர். ஆகவே அவர்களும் ஏனைய தொழிலாளர்கள் பெறுகின்ற சம்பளத்தைப் பெற வேண்டிய காலம் வந்து விட்டது.

மௌனம் சாதிப்பதன் மூலமும், எதையும் வழங்க மறுப்பதன் மூலமும் தொழிலாளர்களைப் பணிய வைக்கலாம் என நிர்வாகம் நினைக்கிறது, ஆனுல் அவர்கள் பெருத்த ஏமாற்றத்தைத் தான் காணப்போகிறுர்கள். எவ்வளவு நீண்ட, நெடிய போராட்டமாக இருந்தாலும் வெற்றி பெருமல் வேலைக்குத் திரும்புவதில்லை எனத் தொழிலாளர்கள் முடிவு செய்துள்ளார்கள். அவர்களுக்கு ஆலையைச் சுற்றியுள்ள பொதுமக்களினதும், ஏனைய தொழிலாளி வர்க்கத்தினதும் ஆதரவு இருக்கிறது.

தொழிலாளர்கள் எப்பொழுதும் தமது வேலை நிறுத்தக் கூட்டங்களுக்குப் பாவித்து வந்த அருகிலுள்ள நிலத்தை வழங்க மறுத்ததின் மூலம் நிர்வாகம் தமது பகைமை உணர்ச்சியை, உண்மையான சொருபத்தைக் காட்டிவிட்டது. இத்தோடு நிர்வாகம் திருப்தி அடையவில்லை. தொழிலாளர்கள் தெருவோரத்தில் ஒரு கூடாரத்தைப் போடாமல் தடுப்பதற்கு தம்மாலான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டனர். அந்த இடத்தில் ஒன்று சேரக் கூடியதாக இருக்கும். நிர்வாகத்திற்காக பல வருடங்களாக உழைத்த வியர்வை சிதப் பாடுபட்ட தொழிலாளர்களுக்கு எதிராக இவ்விதமான மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளை முதலடுளிகள் எடுத்து வருகின்றனர்.

எங்கள் நாட்டிற்கு அவசியமான ஒரு உற்பத்தியை உருவாக்குவதில் இவ்வாலை ஈடுபட்டுள்ளது. துணி இறக்குமதி தான் எங்கள் நாட்டிற்கு பெருமளவு அன்னிய செலவாணியை ஏற்படுத்துகிறது. ஆகவே இந்த ஆலையில் நெய்யப்படும் ஒவ்வொரு யார் துணியும் எங்கள் அந்நிய செலவாணியைப் பாதுகாக்கிறது. அரசாங்கம் இந்த தகராறில் எவ்வித சிரத்தையுமின்றிப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. இத்தகராறில் தலையிட்டு கோரிக்கைகளை வழங்கும்படி நிர்வாகத்தை நிர்ப்பந்திக்க வேண்டும். அன்றேல் ஆலையைத் தானெடுத்து தேசிய நெசவாலைக் கூட்டுஸ்தாபனத்தின் ஒரு பகுதியாக நடத்த வேண்டும்.

## எமது அணியில் ஹைட்ராமணி தொழிலாளர்கள்

கடந்த சில மாதங்களில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் எமது இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தில் இணைந்து வந்துள்ளனர் என்பது தெரிந்ததே. இந்த வரிசையில் கடைசியாக கொழும்பிலுள்ள ஹைட்ராமணி லிமிட்டெட் தொழிலாளர்கள் 200 மேற்பட்டவர்கள் எமது சங்கத்தில் சேர்ந்துள்ளனர்.

இத்தொழிலாளர்கள் முன்பு சமசமாஸ தொழிற்சங்கத்தில் அங்கத்துவம் வகித்தவர்கள். இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் சீரிய சேவையும், சிறந்த நேர்மையான உழைப்பும் தொழிலாளி வர்க்கத்தைப் பெருமளவில் கவர்ந்து வருகின்றது என்பதற்கு இதுமற்றுமோர் உதாரணம்.

## வத்துகாமத்தில் செங்கொடிச் சங்கம்

நாள் ஒரு மேனியாக இலங்கைத் தோட்டத் தொழிலாளர் (செங்கொடி) சங்கம் வளர்ந்து வருகின்றது. கைத்தொழில் நீதி மன்றத்திலும், தொழில் மத்தியஸ்த்த சபைகளிலும் அதுபெற்ற வெற்றியும், தோட்டத் தொழிலாளர்களின் முக்கிய கோரிக்கைகளுக்காக அது நடத்திவரும் அயராத போராட்டமும் பெரியளவில் தோட்டத் தொழிலாளர்களைக் கவர்ந்து வருகிறது:

இவ்விதம் பெருவெள்ளமாக திரண்டுவரும் தொழிலாளர் சக்தியின் காரணமாக புதிய மாவட்ட காரியாலயங்கள் பல செங்கொடிச் சங்கத்திற்காக திறக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் வத்துகாமத்தில் அவ்விதம் ஓர் புதிய காரியாலயம் திறக்கப்பட்டுள்ளது.

## சினிமாத் தொழிலாளர் மாநாடு

இலங்கை சினிமாச் சாலை, படஸ்டுடியோ தொழிலாளர் சங்கத்தின் வருடாந்திர விழாவைக் கொண்டாட பெருமுயற்சிகள் நடைபெற்றுவருகின்றது என கடந்த இதழில் குறிப்பிட்டிருந்தோம். இம்மாநாடு செப்டம்பர் மாதம் 17-18ம் திகதிகளில் கொழும்பில் நடைபெறும்.

இலங்கையிலுள்ள சினிமாஸ் லிமீட்டெட், சிலோன்தியேட்டர்ஸ், எண்டட்டெயின்மன்ட், நியூ இம்பீரியல் டாக்கீஸ், சவோய், நியூ ஒலிம்பியா போன்ற சகல சினிமா சாலை ஸ்டுடியோ தொழிலாளர்களும் எமது சங்க அங்கத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## இ. போ. ச. தலைமைக்கு கண்டனம்

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற இலங்கை மோட்டோர் தொழிலாளர் சங்கத்தின் மாநாட்டில் கலந்துகொள்ள சோவியத் நாட்டிலிருந்தும், மக்கள் சீனத்திலிருந்தும் சகோதரப் பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

இப்பிரதிநிதிகளுக்கு இ. போ. தலைமைக் காரியாலய ஊழியர்களும், பல டிப்போ தொழிலாளர்களும் வரவேற்பளிக்க விரும்பினர். ஆனுல் அவ்விதம் அப்பிரதிநிதிகளை தலைமைக்காரியாலயத்திற்குள் அழைத்துச் சென்று வரவேற்பளிக்க அனுமதிக்க முடியாதென இ. போ. ச. நிர்வாகம் கூறியது.

இதனுல் இ. போ. ச. தலைமைக் காரியாலய ஊழியர்கள் தமது மாநாட்டிற்கு வந்த சகோதரப் பிரதிநிதிகளை தமது அலுவலக முன்றலில் வைத்து வரவேற்றனர்.

ஆனுல் பிறநாட்டுப் பிரதிநிதிகளுக்கு கௌரவம் அளிக்க மறுத்த இ. போ. ச. தலைமையின் போக்கைக் கண்டித்து இப்பொழுது தலைமைக் காரியாலய ஊழியர்கள் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

பதிப்பித்து வெளியிடுபவர்: ஆறுமுகம் செல்லையா கந்தசாமி, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
அச்சிட்டது: ஆர். ஜே. ஆர். அச்சகம், 90/1, கியூ வீதி, கொழும்பு 2.